பொது சன நூலகம்
07 MAY 2002
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

விலை ரூபா: 5.00 பக்கங்கள்:-எட்டு Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 சித்திரை 24 செவ்வாய்க்கிழமை (07.05.2002) தொலைபேசி 3378 ஒலி 139




## சமாதான முயற்சிக்கு ஸ்ரீ. சு. கட்சி ஆதரவளிப்பதாயின்

# ஜனாதிபதி- பிரதமர் உள்ளிட்ட ஆலோசனைக்குழுவை அமைக்குக

## கட்சியின் செயலாளர் மைத்திரி ரணிலுக்கு கடிதம்

(நமது நிருபர்)

**அரசுக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையிலான சமாதான முயற்சிகள் குறித்து, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங் காவையும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவையும் உள்ளடக்கிய ஆலோசனைக் குழுவொன்றை நியமிப்பதற்கும், பேச்சுவார்த் தைக்குப் பின் விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவ தற்கும் அரசு தயாராக இருந்தால், சமாதான முயற்சிக்கு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஆதரவு வழங்கத் தயாராக இருப்பதாக கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேனா பிரதமர் ரணி லுக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.**

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் அரசு மேற்கொண்டுவரும் சமாதான முயற்சிகளுக்கு ஸ்ரீலங்கா சுதந் திரக்கட்சி ஆதரவு வழங்குவது தொடர்பாக கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேன நேற்று மாலை பிரதமர் ரணில் விக்கிரம சிங்காவிற்குக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

சமாதான முயற்சிகளுக்கு ஆத ரவு வழங்குவது தொடர்பாக அக்க டிதத்தில் தெரிவித்திருப்பதாவது:-

ஜனாதிபதி சந்திரிகா குமார துங்காவையும், தங்களையும் (பிர தமர் ரணில்விக்கிரம சிங்காவையும்) உள்ளடக்கிய குழுவொன்றை நீங்கள் நியமிக்க வேண்டும்.

தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடையை உடனடியாக நீக்காமல் அவர் களைப் பேச்சுவார்த்தை மேசைக்கு வரச் செய்து நியாயமான அரசியல் தீர்வை ஏற்கச் செய்ய வேண்டும். அதன் பின்னரே விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும்.

மேலே கூறப்பட்ட இரண்டு விட யங்களை நீங்கள் நிறைவேற்றுவீர் களாக இருந்தால் உங்களால் முன்னெடுத்துச் செல்லப்படும் சமா தான முயற்சிகளுக்கு ஸ்ரீலங்கா சுதந் திரக்கட்சி பூரண ஆதரவை வழங்கத் தயாராக இருக்கின்றது என்று மைத்தி ரிபால சிறிசேன அக்கடிதத்தில் தெரி வித்துள்ளார் (வ)

## மேலும் 12 புலி உறுப்பினர்கள் நேற்று திருமலை சென்றனர்

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் தமது அரசியல் பணிகளை விரிவு படுத்தும் பொருட்டு மேலும் 12விடு தலைப் புலி உறுப்பினர்கள் நேற்று மாலை திருகோணமலை நகருக்கு சென்றுள்ளனர்.

திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் றூபனுடன், தங்கன், வெங்கடேஷ், சுகுமார், துவாரகன், பகீரதன், இளமாறன், இசையரசன், மற்றும் பெண் போரா ளிகளான கிருஷ்ணா, வர்ணா, வாணி சிறி, சாருலதா ஆகியோர், பயணி கள் கப்பல் சேவை மூலம் திருகோண மலை இறங்கு துறையைச் சென்ற டைந்தனர்.

திருகோணமலை மாவட்ட நிர்வாகப் பொறுப்பாளர் ஜங்கரன் இவர்களை

(8ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி ஆணைக்குழுக்கள் யாப்பிலிருந்து நீக்கப்படும்

### அமைச்சர் பீரிஸ் அறிவிப்பு

(கொழும்பு)

அரசியல் யாப்பில் இடம்பெற்றுள்ள விசேட ஜனாதிபதி ஆணைக்குழு ஏற்பாடுகள் அரசியல் யாப்பிலிருந்து நீக்கப்படவுள்ளதாக அமைச்சர். பேரா சிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள் ளார்.

இது தொடர்பாக அரசாங்கம் விரை வில் அரசியல் திருத்தங்களை சமர்ப் பிக்கவுள்ளது. ஜனாதிபதி ஆணைக் குழுவின் தற்காலிக ஏற்பாடுகள் தற்கால சமூக நிலைமைகளுக்கு ஏதுவாக இல்லை என்று அரசு கருது வதாலேயே இந் நடவடிக்கை எடுக் கப்படவுள்ளது.

கொழும்பில் நேற்று அமைச்சரவை மாநாடு நடைபெற்று முடிந்த பின் செய்தியாளர்களிடம் பேசிய போதே அமைச்சரவைப் பேச்சாளர் பேராசிரி யர் ஜி.எல்.பீரிஸ் மேற்கண்டவாறு தெரி வித்துள்ளார்.

(8ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தடையை நீக்குவது பற்றி அரசு எந்த முடிவும் எடுக்கவில்லை

## கட்சித் தாவல் சட்டத்திற்கு

# அரசு எந்த முடிவும் எடுக்கவில்லை

## பேராசிரியர் பீரிஸ் அறிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவது தொடர்பாக அரசாங்கம் இதுவரை எந்த இறுதித் தீர்மானமும் எடுக்கவில்லை என்று அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கம் தொடர்பாகவும், அரசின் சமாதான முயற்சிகள் தொடர்பாகவும் எழுந்துள்ள கண்டனங்களையும், விமர்சனங்களையும் அடுத்தே அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவது தொடர்பாக இறுதித் தீர்மானம் எதையும் அரசு இதுவரை எடுக்கவில்லையாயினும் தடையை நீக்குவது சம்பந்தமாக அரசு ஆழ்ந்து சிந்தித்து வருகிறது.

அரசாங்கம் சிந்தனைத் தெளிவுடன் அடுத்தமாதம் தாய்லாந்தில் விடுதலைப் புலிகளுடன் ஆரம்பக்கட்டப் பேச்சு வார்த்தையை நடாத்த தயாராகி வருகிறது. இச்சந்திப்பின் போது பேச்சுக்களுக்கான நிகழ்ச்சி நிரல் ஒன்றை தயாரிப்பதற்கான நடவடிக்கைகளும்

(8ம் பக்கம் பார்க்க)

# முன்னாள் இந்தியப் பிரதமர் குஜ்ரால் பிரதமர் ரணிலை சந்தித்துப் பேசினார்

## ஹோட்டலுக்குச் சென்று விருந்தும் உண்டனர்.

(கொழும்பு)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ஐ.கே.குஜ்ரால் நேற்று முன் தினம் அலரி மாளிகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை சந்தித்து சமாதான முயற்சிகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இச்சந்திப்பின்போது அரசின் சமாதான நடவடிக்கைகள் குறித்துப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தெளிவாக விளக்கிக் கூறியுள்ளார்.

இந்தச் சந்திப்பின் பின்னர் பிரதமர் ரணில் அவரது பாரியார் சகிதம் இந்திய முன்னாள் பிரதமர் குஜ்ரால், இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபாலகிருஷ்ணகாந்தி, அவரது பாரியார் ஆகியோரை கொழும்பிலுள்ள உணவு விடுதிக்கு அழைத்துச் சென்று இராப்போசனம் வழங்கினார்.

எந்தவித முன்னறிவித்தலுமின்றி பிரதமர் தலைமையிலான குழு உணவு விடுதிக்கு சென்றமை அடுத்து அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த பிரதமரின் அலுவலக அதிகாரி நாட்டில் சமாதான சூழ்நிலை ஏற்பட்டுள்ளமையே முன்னறிவித்தல் இன்றிச் செல்வதற்குக் காரணமென்று கூறினார். (த-5)

# கட்சித் தாவல் சட்டத்திற்கு ஐ.தே.முன்னணிக்குள் எதிர்ப்பு

(கொழும்பு)

அரசமைப்புச் சீர்திருத்தச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்போது எம்.பிக்கள் கட்சி மாறி வாக்களிக்கும் திருத்த சட்டமூலத்தை ஐக்கிய தேசிய முன்னணி அரசில் அங்கம் வகிக்கும் சிறிய கட்சிகள் எதிர்க்கப்போவதாக அறிவித்துள்ளன.

எதிர்வரும் பாராளுமன்றக் குழுக் கூட்டங்கள் நடைபெறும்போது அக்கூட்டங்களில் இப்பிரச்சினை தொடர்பாக எதிர்ப்புக் குரல் எழுப்பப் போவதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உட்பட மற்றும் சிறிய கட்சிகள் முன்னறிவித்தல் கொடுத்துள்ளன.

சிறிய கட்சிகளின் இத்தகைய எதிர்ப்பினை அடுத்து அரசியல் சீர்திருத்தச் சட்டமூலம் இம்மாதம் 21ம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவது மேலும் தாமதமாகலாம் என அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (வ)

# புலன் விசாரணைகளுக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் கைதாகி பிணையில் விடுதலை

(கொழும்பு)

பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பான புலன் விசாரணைகளுக்குப் பொறுப்பாகவிருந்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிஹால் கருணாரட்ணா நேற்று கைது செய்யப்பட்டு 10 ஆயிரம் ரூபா சரீரப்பிணையில் விடப்பட்டுள்ளார்.

லஞ்ச ஊழல்களை விசாரணை செய்யும் ஆணைக்குழுவின் முறைப்பாட்டின் பேரிலேயே அவர் கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிஹால் கருணாரட்ணா மீது 1997ம் ஆண்டு மொறவேவ் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டை

(8ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி அமெரிக்கா பயணம்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று அமெரிக்காவுக்கு பயணமானார்.

71 நாடுகளின் தலைவர்கள் பங்குபற்றும் ஐக்கிய நாட்டு சபையின் சிறுவர் உரிமை தொடர்பான

(8ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

உதவிக் கணக்காய்வாளரின்

# மறியல் போர் நேற்று 4வது நாளாகவும் தொடர்ந்தது

(யாழ்ப்பாணம்)

சேவைக் காலத்தை கவனத்தில் கொண்டு தமக்குநிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி கூட்டுறவுத் திணைக்கள உதவிக் கணக்காய்வாளர்களின் மறியல் போராட்டம் நான்காவது நாளாகநேற்றும்இடம் பெற்றது;

இவர்கள்கடந்தசெவ்வாய்க்கிழமை முதல் தமது சேவைக் காலத்தை கவனத்தில் கொண்டு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி திணைக்கழகத்தின் முன்பாகதொடர்ச்சியான மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன் காரணமாக கூட்டுறவுத் திணைக்கள உத்தியோகத்தர்கள் பணிக்கு செல்ல முடியாது திரும்பிச்செல்வது குறிப்பிடத்தக்கது (உ-6,2)

# சமாதானச் சூழலைக் குழப்ப வேண்டாம்

## ஜெயாவுக்குக் கடிதம்

(மட்டக்களப்பு)

ஈழத்தமிழர்களின் நலனில் அதிக அக்கறை கொள்ளாவிடினும்,இங்குள்ள சமாதானத்திற்குச் சாதகமான சூழ்நிலைகளினை குழப்ப வேண்டாமென குறிப்பிட்டு,மட்டக்களப்பு ஏறாவூர் கிராம அபிவிருத்திச்சங்கம்,தமிழகமுதல்வர் செல்வி ஜெயலலிதாவுக்கு அறிக்கையை தொலை மடல் மூலம்அனுப்பிவைத்துள்ளது

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

தமிழகத்தின் முதலமைச்சர் என்ற பதவியில் இருந்து கொண்டும் இலங்கை தமிழ் மக்களின் நலன்களில்அக்கறை காட்டாது இருப்பது வியப்பளிக்கக்கூடிய செயலாகும்.

முன்னாள் தமிழக முதலமைச்சர் அமரர் எம்.ஜி.இராமச்சந்திரன் தமிழர்களினை தனது உடன் பிறப்புக்களாகவே கருதியவர்.

ஆனால் அவரது கட்சியில் தாங்கள் இருந்து கொண்டு, அவரது வழிவந்த தாங்கள் முற்றிலும் மாறுபாடாகநடப்பது புரியாதபுதிராகவேயுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-8)

# தென்பகுதி வர்த்தகர்கள் கிராமம் கிராமமாக சென்று விற்பனை

(யாழ்ப்பாணம்)

தென்பகுதி பழ வியாபாரிகள் மற்றும் கைவினைப் பொருள் வியாபாரிகள் குடா நாட்டின் கிராமப் புறங்களுக்கும் படையெடுக்க ஆரம்பித்துள்ளனர்.

இவ்வளவு நாட்களாக நகரப்பகுதியில் வைத்து வியாபாரத்தை மேற்கொண்டுவந்த மேற்படி வியாபாரிகள்,

தற்போது கிராமம் கிராமமாகச் சென்று வர்த்தகம் புரிந்து வருகின்றனர்.

இவர்களிடம் இருந்து மலிவாகப் பொருட்களைப் பெற முடிவதாக மக்கள் தெரிவிப்பதுடன், அவற்றைக் கொள்வனவு செய்வதிலும் ஆர்வம் காட்டி வருகின்றனர். (உ-7)

# பனை அபிவிருத்திச் சபை

பனங்கூழ் பிரியர்களுக்கு

## ஒரு நற்செய்தி

எமது பனம் பொருள் உற்பத்தி நிலையத்தில் அநேக வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க வாரத்தில் மூன்று தினங்கள் பனங்கூழ் விற்பனை நடைபெற்று வருகின்றது.

புதன், சனி, ஞாயிறு ஆகிய மூன்று தினங்களும் கூழைப் பருகி இன்புறுங்கள்.

குறிப்பு;- மேற்படி தினங்கள் விடுமுறையானாலும் விற்பனை நடைபெறும்.

★ மரக்கறிக் கூழ் - 20 ரூபா

★ மீன் கூழ் - 30 ரூபா

தலைவர்,
பனைஅபிவிருத்திச்சபை

இல 05, சோமசுந்தரம் அவனியு,
யாழ்ப்பாணம்.
(இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் அருகாமை)
(கி-4182)

# நல்லைக் குமரன் மலருக்கான ஆக்கங்கள் 2002

கடந்த 1993 ஆம் ஆண்டு முதல் நல்லைக் கந்தனின் வருடாந்த மகோற்சவ காலங்களில் தொடர்ச்சியாக எமது குழுவினால் வெளியிடப்பட்டு வரும் மேற்படி மலரின் வரிசையில் இவ்வருடம் வெளியிடப்படவுள்ள 10 ஆவது வெளியீடான நல்லைக்குமரன் மலரில் முன்னைய எமது 09 வெளியீடுகளிலும் இடம்பெற்றிருக்காததும் மலருக்குகந்தது மான தலைப்பில் சிறந்த ஆக்கங்களை துறைசார்ந்த அறிஞர்கள், சைவப்பெரியார்கள், கல்விமான்கள் எதிர்வரும் 15.06.2002 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பி உதவுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

சைவ சமய விவகாரக்குழு
யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்
(கி-4183)

# குடா நாட்டு மக்கள் உள்ளவரை அவர்களுக்கான பணி தொடரும்

யூனியன் அஸ்யூரன்ஸ் பொதுமுகாமையாளர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மக்கள்குடா நாட்டில் இருக்கும் வரையில்அவர்களுக்காக எங்கள் காப்புறுதி சேவை என்றும் தொடரும் என யூனியன் அஸ் யூரன்ஸ் பொதுமுகாமையாளர் எஸ். ரமல்யா சிங்கதெரிவித்தார்.

இலங்கையின் காப்புறுதித் துறையில் முதன்மையான யூனியன் அஷ்யூரன்ஸ் லிமிற்ரெட்டின் கிளை நிறுவத்தினைநேற்றைய தினம்யாழ் ஸ்ரான்லி வீதியில் திறந்து வைத்துப் பேசுகையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் பேசுகையில் இலங்கையிலே43வது கிளை யாழ் நகரில் திறக்கப்படுவது உண்மையிலே பெருமைப்பட வேண்டிய விடயம்.

யாழ்.மக்களோடு எங்கள் நிறுவனம் இணையவேண்டும் என அன்றிலிருந்து முயற்சி மேற்கொண்டு வந்தோம். அந்த முயற்சி இன்று கைகூடி உள்ளது.

யுத்த நிறுத்த காலப் பகுதியிலே எங்கள் காப்புறுதி நிறுவனம் யாழ். மக்களோடு இணைந்துள்ளமையும் பெருமைப்படக் கூடிய விடயமாகும்.

யாழ். மக்களுக்குவேண்டிய சேவையினை நிச்சயம் எங்கள் நிறுவனம் செய்யும். அத்துடன், கிழக்கில் உள்ள யூனியன் அஸ்யூரன்ஸ் லிமிற்றெட் நிறுவனங்களுக்கு இணையாக யாழ். கிளையும் விருத்திஅடையும் என உறுதி படத்தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றுகையில், யாழ்.இளைஞர்யுவதிகளுக்கு வேலைவாய்ப் பினை வழங்கும் நோக்கத்துடனும், யாழ்.மக்கள் வேண்டிக் கேட்டுக்கொண்டதற்கும் இணங்கவுமே இக்கிளை நிறுவனம் இங்குஸ்தாபிக்கப்பட்டதுஎன்றார்.

நேற்று திறந்து வைக்கப்பட்ட மேற்படி காப்புறுதி நிறுவனக் கிளையில் முதலாவது காப்புறுதியை ஈ.எஸ். பி. பேரம்பலம் நிறுவன உரிமையாளர் பி.கணேசலிங்கம் ஆரம்பித்து வைத்தார். (உ-10)

மாங்குளம்-யாழ் ஏ-9வீதியை

# புனரமைப்பு செய்வதற்கு 25மில்லியன்ரூபா ஒதுக்கீடு

(வவுனியா)

யாழ்கண்டி ஏ9வீதி வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம்வரையிலான பகுதிவெகு விரைவில் புனரமைப்புச்செய்யப்படுமென்று பெருந்தெருக்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

புனர்வாழ்வு மீள்குடியமர்வு மற்றும்அகதிகள்புனர்வாழ்வு அமைச்சினால் ஒதுக்கப்பட்டுள்ள 25மில்லியன் ரூபாகொண்டு இந்தபுனரமைப்பு வேலைகளை மேற்கொள்ளவுள்ளதாக வடமாகாண பெருந்தெருக்கள் அபிவிருத்தி அதிகாரசபை பணிப்பாளர் எஸ்.எஸ்.ஆர்.புருஸ் தெரிவித்துள்ளார்.

மாங்குளத்தில் இருந்து பரந்தன் வரையிலான 37கிலோ மீற்றர் பாதை முதற்கட்டமாக புனரமைக்கப்படவுள்ளதாகவும்.

ஏ9பாதையினை முழுமையாக புனரமைக்க வேண்டுமெனில் சுமார்500மில்லியன் ரூபாதேவையென மதிப்பிடப்பட்டுள்ளது. (த-5)

# இராசி பலன்

07-05-2002

சித்திரை 24 செவ்வாய்
தசமி மு.ப 9.28 வரை
பூரட்டாதி முழுவதும்
இராகு காலம் 2.55-4.25
சுப நேரம் 10.25-11.55

**மேடம்**
காரியம் கைகூடும், பொருள்சேர்க்கை, பெருமையடைதல், தெய்வசிந்தை.

**இடபம்**
நல்ல சம்பவம், அதிகாரம் கீழ்ப்படிவு, காரிய சித்தி.

**மிதுனம்**
முயற்சி தாமதம், அச்சமான நிலை, உடல்நலக் குறைவு, பெரியோர் ஆதரவு.

**கடகம்**
உடல் வியாதி, பிரயாணக் கஷ்டம், உறவினர் மனஸ்தாபம், காரியதடங்கல்.

**சிங்கம்**
சுவாரசியம், திடீர்பயணம் பொருள் சேர்க்கை, முயற்சி பலிதம்.

**கன்னி**
குடும்ப மகிழ்ச்சி, காரிய நன்மை, ஆரோக்கியம், பகைவர் நேசம்.

**துலாம்**
தாழ்ந்த சுபாவம், புத்திரரால் கவலை, முயற்சி தாமதம், வியாபார நன்மை

**விருச்சிகம்**
மாணவர் கல்விச்சிறப்பு, அற்பர் உறவு, உடற் சோர்வு, வீண் அலைச்சல்.

**தனுசு**
காரிய அனுகூலம், நண்பர்கள் உதவி, வாக்கு மேன்மை, இனிய சம்பவம்.

**மகரம்**
முயற்சி தாமதம், கௌரவக்குறைவு, வாக்குச் சலசம், மாதர் நட்பு.

**கும்பம்**
சென்ற இடத்தில் செல்வாக்கு, சயன சுகம், சுற்பனை மிகுதி, போசன சுகம்.

**மீனம்**
மனக்கிலேசம், காரிய அலைச்சல், பிதாவழி உறவு வேலைக்கஷ்டம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

மாவீரர் இல்ல புனரமைப்பு

# கூட்டம்

(மந்திகை)

இராணுவத்தினரால் புல்டோசர்கள் மூலம் சேதமாக்கப்பட்ட வடமராட்சிபிரதேச மாவீரர்துயிலும் இல்லங்களை மீளபுனரமைப்பது தொடர்பான கூட்டம் இன்று மாலை3மணிக்கு நெல்லியடி வதிரியில் உள்ள விடுதலைப் புலிகளின் அரசியல்பிரிவின் கோட்டச் செயலகத்தில்நடைபெறவுள்ளது. (த-5-23)

# கூட்டம்

(பளை)

பளை பிரதேச செயலகப் பிரிவில் உள்ள சகல விளையாட்டுக் கழகங்களின் தலைவர் செயலாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை புலோலியில் இயங்கும் பளை பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலுக்கு சகல விளையாட்டுக் கழகங்களினதும் தலைவர் செயலாளர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு செயலக விளையாட்டு உத்தியோகத்தர் சி. ஜெயகுமார் கேட்டுள்ளார். (த-5)

# கலந்துரையாடல்

யாழ் மாவட்டத்தின் அனைத்து பிரதேசசெயலாளர் பிரிவுகளிலுமுள்ள திரையரங்கு, சிறுதிரையரங்கு,ஒலி ஒளிபதிவுக் கூடங்கள்,ஒலிஒளி நாடா விநியோகஸ்தர்கள் மற்றும் படப்பிடிப்பாளர்களுக்கான கலந்துரையாடல் இன்று மு.ப10மணிக்குயாழ் பலநோக்குக் கூட்டுறவுச்சங்க கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் மேற்படி கலைக்கூட உரிமையாளர்கள், நடத்துநர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் துறையினர் கேட்டுள்ளனர். (த)

சிக்கன கடனுதவு

# கூ. சங்கம் ஆதரவு

(யாழ்ப்பாணம்)

கடந்த 5 வருடங்களுக்கு மேலாக யாழ் மாவட்ட கூட்டுறவுத் திணைக்களத்தில் பணியாற்றும் உதவிக் கணக்காய்வாளர்கள் நிரந்தர நியமனம் கோரி மேற்கொண்டு வரும் தொடர்ச்சியான மறியற் போராட்டத்திற்கு சாவகச்சேரி ஸ்ரீ பழனி சிக்கன கடனுதவு கூட்டுறவுச்சங்கம் ஆதரவு தெரிவித்துள்ளது.

குறைந்த சம்பளத்திலும் சேவை அடிப்படையிலும் பணியாற்றிவரும் அவர்களது கோரிக்கைகளை சம்பந்தப்பட்டவர்கள் மனிதாபிமான அடிப்படையில் பரிசீலித்து சாதகமான முடிவுகளை வழங்க வேண்டும். அத்துடன் அவர்களது கோரிக்கைகள் நிறைவேற தாம் பூரண ஆதரவு வழங்குவதாக சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# சாவ. ப. கூ. சங்கம் ஆதரவு

(யாழ்ப்பாணம்)

கடந்த 5வருடங்களுக்கு மேலாக யாழ்மாவட்ட கூட்டுறவுத் திணைக்களத்தில் பணியாற்றும் உதவிக்கணக்காய்வாளர்கள் நிரந்தர நியமனம் கோரி மேற்கொண்டு வரும்மறியற் போராட்டத்திற்கு சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் ஆதரவு தெரிவித்துள்ளது,

கூட்டுறவுத் திணைக்கள உதவிக் கணக்காய்வாளர்களின் கோரிக்கைகளை மனிதாபிமான அடிப்படையில் பரிசீலிக்க சம்பந்தப்பட்டவர்கள் முன்வருவதுடன் அவர்கள் மேற்கொண்டுவரும் மறியற் போராட்டத்திற்கு தாம் பூரணஆதரவு வழங்குவதாகவும் சங்கம் விடுத்துள்ளஅறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# சமாதானமுயற்சிகள் வலுப்பெற இந்தியா தார்மீக உதவிகளை வழங்க வேண்டும்

## சைவ மாநாட்டில் தீர்மானம்

(அரியாலை)

இலங்கை அரசாங்கமும் தமிழீழ விடுதலைப்புலிகளும்மேற்கொண்டு வரும் சமாதான முயற்சிகளை முழுமனதுடன் வரவேற்பதுடன், தமிழர்களின் நீண்ட நெடுநாள் அபிலாசையான தமிழர் தாயகம், சுயநிர்ணய உரிமை, தமிழ்த் தேசியம் ஆகியவற்றை இலங்கை அரசு அங்கீகரிக்க வேண்டும்.

இச்சமாதானச் சூழ் நிலை தீர்க்கப்படாத இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கான இறுதிச்சந்தர்ப்பத்தைவழங்கி யுள்ள தென்பதை உணர்ந்து இலங்கை அரசாங்கமும் சகல அரசியற் கட்சிகளும் இதனை நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

இதற்கு ஆத்மீக ரீதியில் சகல வளங்களையும் வழங்குவதென்று இந்து சமயப் பேரவை தீர்மானித்துள்ளது.

யாழ். இந்துசமயப் பேரவையின் ஏற்பாட்டில் மூன்று தினங்கள் இடம்பெற்ற சைவ மாநாட்டின்முடிவில் இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும், நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களாவன;

★ தமிழ் மக்களுக்கு வழங்க வேண்டிய உரிமைகளை வழங்காது போரை முன்னெடுப்பதை நிறுத்தி சமாதானத்தை நிலை நாட்ட இலங்கை அரசு மேற்கொண்டுவரும்சமாதான முயற்சிகளைப் பாராட்டுவதுடன்இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே பேச்சுவார்த்தையைத்தொடக்க நோர்வே அரசாங்கம் மேற்கொண்டு வரும் சமாதான முயற்சி வலுப்பெற்றுவளர்ந்தோங்கக் கூடிய சகல தார்மீக வளங்களையும் இந்திய அரசு தாராளமாக வழங்க வேண்டும். இதற்கு அனுசரணையாகத் தமிழ்நாடும் தமிழக அரசும் தாய்மையுணர்வுடன் செயற்பட வேண்டும்.

★ எமது மக்கள் இந்தியாவிலுள்ள புனித தலங்களுக்குச் சென்று தமது ஆத்மீகக் கடமைகளை நிறைவேற்றுவதற்கு ஏதுவாகவும் இருநாட்டிலுள்ள சைவத்தமிழ் அறிஞர்கள் கருத்துப்பரிமாறுவதற்குவந்து செல்வதற்குஉதவியாகவும் எமது நாட்டிற்கும் இந்தியத் திருநாட்டிற்கும் இடையேயான விமானப் போக்குவரத்தைப் பலாலியூடாகவும் கப்பல்சேவைகளைத் தலைமன்னாரூடாகவும்தாராளமாக ஏற்படுத்துமாறு இலங்கை அரசையும் இந்திய அரசையும் கோருவது.

★ இராணுவ நடவடிக்கை ஆரம்பித்த நாள்முதல் கைது செய்யப்பட்டு இதுவரை நீதி விசாரணைக்கு உட்படுத்தப்படாதிருக்கும் சகல இளைஞர்களையும் யுவதிகளையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும். இவர்களுடைய தற்போதையநிலையைப்பெற்றோர்களுக்கு உடனடியாக வெளிப்படுத்த வேண்டும். இவ்விதம் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களைக் கொண்டுள்ள குடும்பங்களுக்குக் அவர்கள் தமது அன்றாட வாழ்க்கையைத் தொடருவதற்கு தேவையான பண உதவிகளைக் காலந்தாழ்த்தாது உடனடியாக வழங்க வேண்டும்.

★ இராணுவ நடவடிக்கை ஆரம்பித்த நாள்முதல் சொல்லொனாத் துன்பத்திற்குள்ளாகி இடம்பெயர்ந்து சோகக் கடலில் ஆழ்ந்துவாழும் சகல மக்களுக்கும் வேண்டிய போதுமான நிவாரணங்களை உடனடியாக வழங்குமாறும் இன்ர்கள் தத்தம் வீடுகளுக்குச்சென்று மீளக்குடியமரக் கூடிய சகல ஏற்பாடுகளையும் உடனடியாக மேற்கொள்ளுமாறும் சாதாரண வறிய மக்களுக்கு வழங்கப்பட்டுவரும் வீடு புனரமைப்பதற்கான நஷ்டஈட்டுத் தொகையை ஒரு இலட்சமாக அதிகரிக்க வேண்டும்.

★ நடைபெறும் போரால் தொழில்வளங்களை இழந்தவர்களுக்கு மீளவும் தொழில் வளங்களை ஆரம்பிப்பதற்கும் தொழில் நிறுவனங்களைப் புனரமைப்புச் செய்வதற்கும் ஏற்ற உதவிகளை உடனடியாக வழங்குமாறு இலங்கை அரசை கோருவது.

★ தற்போது நடைபெறும் போர் காரணமாக விதவைகளையும் அநாதைகளையும், அங்கவீனர்களையும் அவல வாழ்வு வாழ்வோர்க்கு அவர்களுக்கேற்ற மறுவாழ்வுத் திட்டங்களை இலங்கை அரசாங்கம் உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

இந்நாட்டில் தமிழ் மக்களுக்கு வழங்க வேண்டிய உரிமைகளை வழங்காத காரணத்தினாலே நடைபெற்றுக் கொண்டிருக்கும் இப்போரில் பகுதியாக அல்லது முழுமையாக அழிக்கப்பட்டு பூசை வழிபாடுகள் இன்றிப் பூட்டப்பட்டிருக்கும் சகல ஆலயங்களையும் புனரமைப்புச் செய்து வழிபாட்டுக்குத் திறந்து விட வேண்டும். ஆலய வளாகத்தில் அமைந்துள்ள அனைத்து இராணுவ முகாம்களையும் வாபஸ்பெறுமாறும் பாதுகாப்புக் காரணங்களைச் சாட்டாக வைத்து மட்டுப்படுத்தப்பட்ட முறையில் வழிபாட்டுக்குஅனுமதிக்கப்பட்ட சகல ஆலயங்களுக்கும் மக்கள் சுதந்திரமாகச் சென்று வழிபடக் கூடிய சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு இலங்கை அரசை கோருவது.

★ போர் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள அனைத்து இந்து நிறுவனங்களையும் புனரமைப்புச் செய்து அவை புத்துயிர் பெற்று இயங்கக்கூடிய வகையில் சகல வளங்களையும் தாராளமாக வழங்குமாறு இலங்கை அரசாங்கத்தைக் கோருவது.

★ எமது ஆலயங்களில் ஏற்படும் பிணக்குகளைத் தீர்த்து வைப்பதற்கு சைவ விவகாரக் குழு ஒன்றை சைவபீடங்களையும்சைவ நிறுவனங்களையும் உள்ளடக்கி அமைப்பதும் இக் குழு அப்பிணக்குகளைச் சமூகமாகத் தீர்த்து வைக்கவேண்டுமென்றும் இதற்கு சகல தரப்பினரும் தமது பரிபூரண ஒத்துழைப்பை நல்க வேண்டும்.

★ எமது அருளாளர்கள் எழுதிய பக்தி எழுச்சிப் பாடல்களைக் கொச்சைப்படுத்தக் கூடிய வகையில் பத்திரிகைகளில் வெளிவரும் ஆக்கங்களை சம்பந்தப்பட்ட எழுத்தாளர்கள் உடனடியாக நிறுத்த வேண்டும். தமது ஆக்கங்களை எமது மத, மொழி மறுமலர்ச்சிக்கு உந்துசக்தியைக் கொடுக்கக்கூடிய வகையில் அமைத்துக் கொள்ள வேண்டும்.

★ எமது மக்களிடையேயுள்ள ஏழ்மை நிலையைப் பயன்படுத்தித் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் மதமாற்ற நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்துமாறும் தர்மப் பணிகளை இனமத, மொழி கடந்த நிலையில்மேற்கொளவதுடன், இத்தகைய மனோபாவத்தை வளர்த்துக் கொள்ளுமாறும் சம்பந்தப்பட்டவர்களை கோருவது.

★ எமது மதம்சம்பந்தமான உயரிய புனிதமான தத்துவ நூலான சைவசித்தாந்தசாஸ்திரங்களை விமர்சிப்பதையும் அவற்றைச் சைவ அனுஷ்டானங்கள் இன்றிப்போதிப்பதையும் நிறுத்துமாறு சம்பந்தப்பட்ட கிறிஸ்தவக் குழுவைக் கோருவது ஆகிய 13 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (உ-225)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். வலயக் கல்வி அலுவலகத்தில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அனைவருக்குமான கலந்துரையாடல் ஒன்று, இன்று காலை 9.00 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் இடம் பறவுள்ளதால் சம்பந்தப்பட்ட சகலரையும் தவறாது சமுகமளிக்கும் படி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கம் அறிவித்துள்ளார். (உ)

# கால்நடையாக சென்று மக்களின் பிரச்சினைகளை அறியும் யாழ்.முதல்வர்

(யாழ்ப்பாணம்)

வாகன வசதிகள் ஏதுமற்ற நிலையில் மக்களின்பிரச்சினைகளை நேரில் சென்று விசாரிப்பதற்குத் தான் நடந்தே சென்று வருவதாக யாழ். மாநகரமுதல்வர் எஸ். கந்தையன் தெரிவித்தார்.

இதேவேளை மேயர் என்ற வகையில் இன்னமும் வர்கன வசதி ஏற்படுத்தப்படாமை பற்றியும் சுட்டிக்காட்டினார். (உ-6-2)

# யாழ். நகரின் அழகுக்கும் தூய்மைக்கும் சவால்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப்பகுதியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை நாளுக்குநாள் அதிகரித்துவருகின்ற போதிலும்,

அவற்றை பிடித்து அழிப்பதற்கு வாகன வசதியோ, புதைப்பதற்கு உரியஇடமோ இல்லாதிருப்பதாக யாழ். மாநகர முதல்வர் எஸ். கந்தையன் தெரிவித்தார்.

இதேவேளை, வீதிகளில் சேரும் குப்பைகளை அள்ளி ஏற்றுவதற்கு வாகனவசதிகள் இன்மையால் நகரின் அழகையும் தூய்மையையும் பேண முடியாதிருப்பதாகவும் அவர் கவலை தெரிவித்தார். (உ-6-2)

# சமூக நாடகங்கள் எதிர்பார்ப்பு

(யாழ்ப்பாணம்)

''யாழ்ப்பாணபிரதேசசெயலக கலாசார பேரவையினர் எதிர்வரும் ஆகஸ்ற் மாதத்தில் மாபெரும் கலை நிகழ்வொன்றினை நடத்த தீர்மானித்துள்ளனர்.

இந்நிகழ்விற்காக கலைஞர்களிடம் இருந்து ஆக்கப்பூர்வமான சமூக நாடகங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

கிடைக்கப்பெறும் நாடகங்களில் இருந்து சிறந்த நாடகம் பேரவையினால் தெரிவு செய்யப்பட்டு கலை நிகழ்வில் மேடை யேற்றப்படும்.

யாழ். பிரதேச செயலக பிரிவில் வாழும் கலைஞர்கள் தமது நாடகத்தை மேடையேற்ற விரும்பின் 2002.05.15 ஆம் திகதி க்குமுன் யாழ். பிரதேசசெயலருடன் தொடர்புகொள்ளும்படியும் இதில் பாடசாலை மாணவ நாடக குழுவினரும் பங்கு பற்றமுடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

### தமிழகத்திலுள்ள ஈழ அகதிகளை

# அழைத்துவர வசதியாக விரைவில் கப்பல் சேவை

(கொழும்பு)

மன்னாருக்கும் இராமேஸ்வரத்திற்கும் இடையிலான கப்பல் சேவை விரைவில் ஆரம்பிக்கப்படும் என்று வன்னிப் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் நூர்டீன் மசூர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மன்னார் புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலையில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நாட்டில் நடைபெற்ற போர்ச் சூழல் காரணமாக இந்தியாவிற்கு அகதிகளாகச் சென்று தங்கியுள்ளவர்களை மீண்டும் நாட்டிற்கு அழைத்து வந்து குடியமர்த்தப்படுவதற்காகவே இச் சேவை விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இக் கப்பல் சேவையினை ஆரம்பிப்பது தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா இணக்கம் தெரிவித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

# நகரப்பகுதி நடைபாதை வியாபாரிகளுக்கு முதல்வர் அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப் பகுதியில் நடைபாதை வியாபாரம் அதிகரித்துள்ளதையடுத்துபோக்குவரத்துச் செய்வோர் மிகுந்த சிரமமடைந்து வருகின்றனர்.

தென் பகுதியில் இருந்து வந்த முஸ்லிம் மற்றும் சிங்கள வர்த்தகர்களும் நடைபாதை வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளமையும்,

இவர்கள் அப்பிள் மற்றும் அன்னாசிப் பழங்களை பெருமளவில் நடைபாதையில் வைத்து வியாபாரம் செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, போக்குவரத்துச் செய்பவர்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் நடந்து கொள்ள வேண்டாமென யாழ். மாநகர முதல்வர் எஸ். கந்தையன் நடைபாதை வியாபாரிகளிடம் அறிவுறுத்தல் விடுத்துள்ளார். (உ-6-2)

### மறியல் போரில் ஈடுபட்ட

# லங்கா சீமெந்து நிறுவன ஊழியர் 67 பேருக்குப் பணி நீக்க உத்தரவு

(யாழ்ப்பாணம்)

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தொடர் மறியல் போரில் ஈடுபட்டு வரும் லங்கா சீமெந்துநிறுவன ஊழியர்களை மேற்படி நிறுவனம் பணி நீக்கம் செய்துள்ளது.

இது தொடர்பாகநிறுவனப் பணிப்பாளர் அறிக்கை ஒன்றினையும் விடுத்துள்ளார்.

அவ் வறிக்கையில்;

24.05.2001, இடம்பெற்ற மந்திரி சபைக் கூட்டத்தில் 30.04.2001க்கு பின் சம்பளம் வழங்குவதற்கான நிதியை திறைசேரியால் வழங்கமுடியாதெனவும், சுய விருப்பின் பேரில்இளைப்பாறுவதற்கு உரிய திட்டத்தின்படி தொழிற்சாலை ஊழியர்களுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டுமென அங்கீகாரம் அளிக்கப்பட்டது.

18.07.2001 திகதியிடப்பட்ட சுற்றறிக்கை மூலம் தொழிற்சாலை ஊழியர்கள் அனைவரும் சுயவிருப்பின் கீழ் இளைப்பாறும் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு பின் இரு முறை 31.10.2001 வரை நீடிக்கப்பட்டது.

மந்திரி சபையின் அனுமதியுடன் திறைசேரியால் ஒதுக்கப்பட்ட நிதியைப் பாவித்து வழங்கப்பட வேண்டிய கொடுப்பனவுக்கு, 30.04.2001ல் சம்பளம் பெற்று வந்த 394 கிடப்பு நிலைஊழியர்களில் 67 கிடப்பு நிலை ஊழியர்கள் மாத்திரம் சுய விருப்பின் கீழ் இளைப்பாறும் திட்டத்திற்கானவிண்ணப்பங்களை சமர்ப்பிக்கவில்லை.

கைத்தொழில் பொதுத் தொழிற்சாலைச் சங்கத்தின் வேண்டுகோளுக்குஏற்ப விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்வதற்காக அவர்களின் நிலையைக் கருத்திற் கொண்டு காலத்தை 15.11.2001 வரை நீடித்திருந்தோம்.

நிறுவனத்திடம் நிதிஇல்லாதபடியால் அவர்களின் எந்த விதமான கோரிக்கைகளையும் ஏற்றுக்கொள்ளும் நிலையில் நிறுவனம் இல்லை.

கைத்தொழில் பொது தொழிலாளர் சம்மேளனத்தின் அனுசரணையுடன தொழில் ஆணையாளர் நாயகத்தின் உடன்படிக்கையின்படி விண்ணப்பிக்காத 67 ஊழியர்களையும் சுயவிருப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் இளைப்பாறும்படி பணித்துள்ளார். ஆகவே 31-12-2001 ஆம் திகதியிலிருந்து மேற்கூறிய 67 ஊழியர்களையும் சேவையிலிருந்து நிறுவனம் பணிப்பாளர் சபை நீக்கியுள்ளது. என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

# நெடுநாள் பழக்க வழக்கம், சம்பிரதாயங்களை அனுசரித்தே உலக வாழ்க்கை நடைபெறுகிறது

துக்கப்படுவது எந்தப் பிரச்சினையையும் தீர்த்து விடாது விவாதத்தில் எல்லோருமே குறைகளை எடுத்துக் கூறலாம். கொள்கைபற்றித் தீர்மானித்து விட்டால், குறை கூறுவதும், தவறுகளைக் கண்டு பிடிப்பதும் சுலபம். வாழ்க்கை ஓர் அலாதியானநியதியின்படி சுழலும் வழக்கப்படி நடந்து கொண்டு தான் இருக்கும். நெடுநாள் பழக்கவழக்கங்கள் சம்பிரதாயங்கள் ஆகியவைகளை அனுசரித்து வாழ்க்கை நடக்கிறதே அல்லாது, மனிதன் இயற்றும் சட்டதிட்டங்களினால், வாக்கு வாதங்களினால் அல்ல!

### இலட்சியத்தில் பக்தி வேண்டும்

வினைகப் புகழ்ச்சி செய்தல் கூடாது. உள்ளதை உள்ள படியே உரைக்க வேண்டும். அதிகார வர்க்கம் ஒழிந்து ஜன நாயகம் ஏற்பட்டவுடனேயே வெறும் புகழ்ச்சியும் ஒழிந்திருக்க வேண்டும். நாம் கஷ்டப்பட்டு மனச்சாட்சிக்கு நியாயமாக பக்திசிரத்தையுடன் உழைத்தாலன்றி வெற்றி பெற முடியாது. ஆசை இருந்தால் மட்டும்போதாது. இலட்சியத்தில் பக்தி வேண்டும். பெரும் முயற்சிகள் அனைத்துக்கும் சிரத்தை தேவை.

ஒழுங்கீனம், குறும்பு, முணுமுணுத்தல், அர்த்தமில்லாத ஆசேபம் இவற்றால் ஒன்றும் பலன் கிடைக்கப் போவதில்லை. நாம் எக்காரியத்திலும் நிதானமாகக்கூடபடவேண்டும். இதயத்தில் தெய்வபக்தியுடையவர் எவரும் குழப்பம் செய்ய வேண்டும் என்ற துராசைக்கு அடிமையாக மாட்டார். பொறுப்பில் சிரத்தை கொள்வது ஒரு வகையான பக்தி தானே? பக்திதான் வணக்கம். உங்கள் வேலையில் நீங்கள் பக்தி கொள்வீர்களானால் அதுதான் கடவுளை வணங்குவதாகும்.

### மனமும் ஆத்மாவும் விருத்தியடையும்

தேகப்பயிற்சி செய்தால்எப்படி உடல் உறுதி பெறுகிறதோ அதுபோல தர்மம் செய்யப் பழகிக்கொண்டால் மனமும் ஆத்மாவும் விருத்தியடையும். தர்மம் செய்யாமல் உயிர்வாழ்வோமானால் மனிதர்களாகிய நமக்கும் மிருகங்களுக்கும் என்ன வித்தியாசம்! நிர்வாகத்துறையிலோ சமூகத்திலோ அல்லது வேறு எந்தக் குறிப்பிட்ட வேலையிலோ தற்காலிகமாக ஏற்படும் கஷ்டங்களைக் கண்டுமனக் குழப்பமடைந்து விடாதீர். நம் இலட்சியம் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என நான் உறுதியாக நம்புகிறேன், அதைநாம் பக்திசிரத்தையுடன்நிறைவேற்றிவைக்கவேண்டும். புழுக்கத்தில் போதிய பணமில்லையே என்பதற்காகச்சோர்ந்து விடாதீர்கள். ஒருநாட்டின் அறிவாளிகளும், தம்முடன்பூர்னவேலைகளை சிரத்தையுடன் நிறைவேற்றிவைக்க அவர்களுக்குள்ள திறமையும்தான் உண்மையான செல்வம். இவ்விசிரத்தை இருந்தால் வேறெவ்விதக் குறைகளையும் சீக்கிரம் பூர்த்தி செய்துவிடமுடியும்.

மனஞ்சோர்ந்து போவதிலும், காரணமின்றிநம் கைநாமே கேவலப்படுத்திக்கொள்வதிலும் ஒருபயனுமில்லை. நம்பிக்கைதான் சாதனைகளுக்கு அடிப்படை முக்கியத்துவம் பொருந்திய ஓர் உயர்த்தை அடைந்துவிடுவதுஎளிதுதான். ஆனால் அந்த உயர்நிலையை இழந்துவிடாமல் காப்பாற்றுவதுதான் மிகக்கடினம். நாமெல்லோரும் பிறவிமுமலாசுக் சில குணாதிசயங்களைப் பெறுகிறோம். நம்முடைய சொந்தமுயற்சியின் விளைவாகவே அவைகள் ஏற்பட்டுள்ளவை என்று பொதுவாகக் கருதப்படுகிறது. ஆனால், பரிசீலனை செய்துபார்த்தால், மக்களிடம் காணப்படும்பலவேறு குணாதிசயங்கள் பாரம்பரியத்தின் விளைவாக ஏற்பட்டுள்ளவை என்பது தெரியவரும்.

### விருப்பமும் உற்சாகமும்

உலக வாழ்க்கையில் நாம் செய்யவேண்டிய கடமைகளைச் சரியாகச்செய்து, தீர்ப்பதற்கு உள்ளத்தில் உண்டாகும் விருப்பமும், உற்சாகமும் காமம் அல்ல, அந்தவிதமான ஆசைதருமத்துக்குப் பகை அல்ல. அதுதருமத்துக்கு இசைந்த விருப்பம். மனிதன் செயலெல்லாம் பிறப்புடன் வந்த சுபாவங்களின் பயன். அந்தசுபாவகுணங்கள் நம்பாட்டுக்கு வேலைசெய்யும். சுபாவ குணங்களை அறவே புறக்கணித்து விடும்முயற்சி வீணாகும், அவற்றை நல்வழியில் செலுத்துவதே மனிதன் செய்யக்கூடிய முயற்சி. இல்லற வாழ்வு என்பது ஆற்றுவெள்ளத்தை வயலில் பாய்ச்சி, பயிரெடுத்துப்பலன் பெறுவது போலாகும்.

**- ராஜாஜி -**

கூடா ஒழுக்கம் இன்பத்துக்கு வழிபோல் தோற்றம் காட்டி மோசம் செய்து, வாழ்க்கையை நாசம் செய்யும். நம்முடைய உடலும் உள்ளமும் ஆண்டவனுடைய கோயில். அதைச் சுத்தமாக வைத்துக் காப்பது நம் கடமை. பணம் என்பது ஒரு சாதனைப் பொருள். அதுவே ஒரு சுகமன்று. முடிவு மன்று, அவர்களுக்கு ஒரு வரம்புண்டு. அந்த வரம்புக்கு மேல் மிஞ்சின பின் அது ஒரு பாரமும் கவலையுமே தான்.

நாம் கோருவது சுகம். இதை மறந்து விட்டுக் காகிதத்தில் எழுதிய பணத்தின் கணக்கே சுகம் என்று கற்பனை செய்து கொண்டு அதற்கு அடிமையாய்ப் போகிறோம். முன் காலத்திலாவது பணம் என்பது தங்கம், வெள்ளியாக இருந்தது. கைநிறைய எடுத்து அள்ளும் பான்மை கொண்டதாக இருந்ததும் அள்ளியும் எண்ணியும் மடையர்கள் இன்பமடைபலாம்என இருந்தது இக் காலத்தில் அதுவுமில்லை நம்பிக்கையின்றி சந்தேகப் பட்டுக் கொண்டேயிருந்தால் மாலுமி இல்லாத படகு கடலில் அலைந்து காற்றில் அடிபட்டு அவஸ்தைப் படுவதுபோல நாமும் கெடுவோம், அன்புக் கலை சுமுகமாக நடந்து கொள்ளும், கலை பொறுமைக் கலை, மதுரமொழி பேசும் கலை, கோபப்படாதிருக்கச் செய்யும் கலை ஆகியவை பெண்களுக்கு வேண்டும். ஒரு விஷயத்தை கௌரவித்தாலொழிய அந்த விஷயத்தின் உண்மை புலப்படாது.

### வேறுபாடுகள் உயர்வு, தாழ்வல்ல

வேறுபாடுகளெல்லாம் வேறுபாடுகளேயன்றி உயர்வு தாழ்வு குறிப்பன அல்ல என்பதை நாம் எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். உயர்வு, தாழ்வு கற்பியாமலிருந்தால் எத்தனை வேறுபாடுகள் இருந்தாலும் நாம் கவலைப்பட வேண்டியதில்லை. ஆண்களும் பெண்களும் தங்கள் விருப்பம் போல் மணம் செய்து கொள்ளச் சுதந்திர முடையவர்களாக இருக்க வேண்டும் என்பதே எனது உறுதியான நம்பிக்கை. மணம் என்பதெல்லாம்ஒருவிதமான நட்பு முறையேயன்று வேறன்று இரண்டு நண்பர்கள் கூட்டு முறையில் வாழ்க்கை நடத்த விரும்புகிறார்கள் என்பதே அதன் பொருள். ஜாதிவேறுபாடுகள் பார்க்காமல் இருந்தால் நண்பர்களாகவும்இருக்க முடியும். நாம் பலவீனமாக இருக்கும் போதுதான் பலாத்காரத்தைப் பற்றிச் சிந்திக்கிறோம்.

அறிய முடியாத அளவு பெரியதாகும். அறிவு என்னும் மகாசமுத்திரம்-ஏதோஅங்கும் இங்கும் அலைகள் கொண்டு வந்துஒதுக்கும்சிற் சிலவற்றைச் சேகரித்ததும் சமுத்திரத்தைப் பற்றிமுழுவதும் அறிந்து விட்டதாக எண்ணி விடுகிறோம்.

பணிவுடையோர்தான் எதையும் அறிய முடியும் நல்ல எண்ணங்கள், நல்லமொழிகள் நல்ல செயல்கள் இவற்றிலுள்ள சக்தி அளவற்றதாகும். அதையே நாம் பயன்படுத்த வேண்டும். அறிவைக்குழப்ப விடலாகாது. அத்துடன் பணிவுக்குணத்தையும் அடிக்கடி புதுப்பித்துக் கொள்ள வேண்டும். இல்லையெனில் நாம் கவலைப்படவும் செய்வோம். எந்தக் காரியத்தையும் செய்ய முடியாதவர்களாக ஆகிவிடவும் செய்வோம். பிறர் பொறுமையில்லாமலிருந்தால்என்ன? நாம் பொறுமையோடு இருப்போம் பிறர் பொறுமை இழந்தால் அதற்காகக்கவலைப்பட வேண்டாம். சர்வலோக சஞ்சீவியான அன்பைப் பயன்படுத்துங்கள் அது அற்புதமாகக் குணப்படுத்தி விடும்

### மதத்தில் வேற்றுமையில்லை

நாம் செய்யும் காரியங்கள் எல்லாம் எப்போதும் அதிகமாக யாதொரு இடையூறுமின்றி நடைபெற வேண்டும் என்று எண்ணினால் நாம் உலகத்தில் எந்தக் காரியத்தையும்செய்து முடிக்கமாட்டோம் விசித்திரம் என்றால் உண்மை விளங்காத ரகசியமும் அதனுடன் அழகும் அற்புதமும் கலந்தபான்மை. துறவுஎன்பது ஒரு வெளிவேடமல்ல. அது உள்ளத்தில் நிறைவேற்ற வேண்டிய ஒரு வெற்றி ஆகும் மதத்தில் வேற்றுமை கிடையாது. கருத்தில் தான் வேற்றுமை ஒருமனிதர்கோபமடையும் போது அவர் மனத்திற்குள்ளேயே புயல் எழும்புகிறது. மனச்சாட்சியை அது அழித்து விடுகிறது.

கஷ்டங்களை நாம் அநுபவித்தால் தான் அதைப்புரிந்து கொள்ள முடியும் தவறைச் சரிப்படுத்திக் கொள்ளப் பிரியாசைப்படுவதால் அவமானம் கிடையாது. குறை இருந்தால் தான் நல்ல ஒழுக்கத்தின் மேன்மையை உணர்ந்து பாராட்ட முடிகிறது. நோயிருந்தால் தானே ஆரோக்கியத்தின் முக்கியத்துவத்தை உணரமுடிகிறது? பரஸ்பர நம்பிக்கை நன்டைத்தை நல்லொழுக்கம் ஆகியவையே வெற்றிக்கான மார்க்கங்கள்.

---

## 20 ஆம் திகதி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரி இரண்டாம் தவணைக்காக இம்மாதம் 20 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக அதிபர் க. இராசதுரை அறிவித்துள்ளார். (உ)

## உடற் பயிற்சி போட்டி

(யாழ்ப்பாணம்)

சங்கானைக் கல்விக்கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான உடற்பயிற்சிப் போட்டி நாளை பி.ப 1.30 மணிக்கு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் சங்கானை கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ். செல்லையா தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிமேற்கு பிரதேச செயலர் எஸ். இரட்ணம் கலந்து கொள்ளவுள்ளார். (உ)

---

## குற்றச் செயல்களை தடுக்கப் புதிய திட்டம்

(கொழும்பு)

மேல்மாகாணத்தின் தெற்குப் பகுதிகளில் இடம்பெறும் குற்றச் செயல்களைத் தடுக்கவும், அவற்றுடன் தொடர்புடைய பாதாள உலகக் குழுவினரைக் கைது செய்யவும் விசேட திட்டம் ஒன்று அமுல் படுத்தப்படவிருப்பதாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் சிறிசேன ஹேரத் தெரிவித்துள்ளார்.

குற்றச் செயல்கள் கூடுதலாக இடம்பெறும் பகுதிகளைச் சேர்ந்த பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரிகள், மற்றும் உதவிப் பொலிஸ் பொறுப்பதிகாரிகளுக்கான அறிவுறுத்தல் கூட்டமொன்று நேற்று முன்தினம் இடம் பெற்ற சமயத்திலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, குற்றச்சம்பவங்கள் இடம்பெறும் பிரதேசங்களில் விசேட பொலிஸ் அலகுகள் நிறுவப்படவுள்ளதாகவும், அவ்விடங்களுக்கு உடனடியாக பொலிஸார் செல்ல வசதிகள் ஏற்படுத்தப் பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-9)

## 4 மாதங்களில் குடாநாட்டில் 19 மிதிவெடிச் சம்பவங்கள்

### ஒருவர் உயிரிழப்பு நால்வர் காலிழப்பு

(யாழ்ப்பாணம்)

இவ்வருட ஆரம்பம் முதல் இன்று வரையான நாட்களில் யாழ். குடா நாட்டில் இடம்பெற்ற மிதிவெடிச் சம்பவங்களில் ஒருவர் உயிரிழந்ததுடன், 18பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இவர்களில் நால்வர் தமது கால்களில் ஒன்றை இழந்துள்ளதாகப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

ஜனவரி, பெப்ரவரி, மார்ச், ஏப்ரல்மாதங்களில் முறையே 3,7,4,5 மிதிவெடிச்சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

அரியாலைப் பகுதியில் இடம்பெற்ற மிதிவெடிச் சம்பவத்திலேயே ஒருவர் கொல்லப்பட்டதுடன்,

படையினர் நிலைகொண்டிருந்த பகுதிகளிலேயே இம் மிதிவெடிச்சம்பவங்கள் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-10)

## சமுர்த்தித் திட்டத்தில் இருந்து 2 இலட்சம் பேரை நீக்கத் திட்டம்

(கொழும்பு)

சமுர்த்தி நிவாரணம்பெறும் இரண்டு லட்சம் பேரை சமுர்த்தி திட்டத்திலிருந்து நீக்குவதற்கு தீர்மானித்துள்ளதாக சமுர்த்தி அமைச்சர் சிறிசேன ரூபசிங்க தெரிவித்துள்ளார்.

பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதையடுத்தே இவ் இரண்டு லட்சம் பேரினதும் சமுர்த்தி நிவாரணம் நீக்கப்படவுள்ளது.

இத் திட்டத்திலிருந்து நீக்கப்படுபவர்களில் காணாமல் போன 500 குடும்பங்களும் உள்ளடங்குகின்றனர்.

இவர்கள் அனைவரையும் கட்டாய சேமிப்பு திட்டம், சமூகப் பாதுகாப்புத் திட்டம் என்பவற்றில் இணைத்துக் கொள்ளும் வகையில் 140 கோடி ரூபா வழங்கப்படவுள்ளது.

தற்போது நாட்டில் 16 லட்சத்து 67 ஆயிரத்து 795 குடும்பங்கள் சமுர்த்தி நிவாரணம் பெற்று வருகின்றன. இக் குடும்பங்களுக்காக எதிர்வரும் 8 மாத காலத்துக்கு ஒதுக்கி வைத்துள்ள நிவாரணத் தொகையில் 25 வீதத்தைக் குறைக்கவும் அமைச்சு தீர்மானித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-9)

## சட்ட எதிர்ப்பாளரைச் சாடுகிறார் அமைச்சர் ரவி

(கொழும்பு)

அரசியல் ரீதியான குற்றங்களையும், ஊழல்களையும் புரிந்தோர்மீது நடவடிக்கை எடுப்பதற்காக கொண்டுவரப் பட்ட சட்டத்தை எதிர்க்கும் அனைவரையும் வர்த்தக நுகர்வோர் விவகாரஅமைச்சர் ரவி கருணாநாயக்கா கண்டித்துள்ளார்.

அரசியல் ரீதியாக பழிவாங்கும் எண்ணங்களுடனேயே இச்சட்டம் கொண்டுவரப் பட்டது எனப் பலர் கண்டனம் தெரிவித்திருப்பதையடுத்து அமைச்சர் இவ்வாறு கண்டனம் தெரிவித்துள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்காலத்தில் நிலையியல்சட்டம் உரியமுறையில் கடைப்பிடிக்கவில்லை என்பதனாலேயே, அவ்வாட்சிக்காலத்தின்போது அரசியல் வாதிகள்மீது ஊழல், ஒழுங்கீன குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

இத்தகைய ஊழல்கள் ஐக்கியதேசிய முன்னணி ஆட்சியின்போது இடம்பெறாது தடுப்பதற்காகவும், இவ்வாறு கடந்த ஆட்சியின்போது ஊழல்புரிந்தோர் ஐ. தே. அரசில் அங்கம் வகித்தாலும் சட்டத்தின் முன் நிலைநிறுத்துவதற்காகவுமே இச்சட்டம் கொண்டுவரப்பட்டது எனவும் தெரிவித்துள்ளார். (உ-8)

## இன்று ஒரு தகவல்

# அண்ணா அறிஞரானார்

ஆசிரியர் கல்கியின் தலைமையில் சென்னையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதில் அண்ணா பேசுவார் என்று அறிக்கப்பட்டிருந்தது. தலைவர் கல்கி குறிப்பிட்ட நேரத்தில்பொதுக் கூட்டத்திற்கு வந்துவிட்டார். ஆனால் அண்ணா வந்து சேரவில்லை. பொதுவாக இரவு நேரங்களில் நீண்ட நேரம் அண்ணா நாடகங்களும், பத்திரிகைகளுக்குக் கதை, கட்டுரைகளும் திரைப்படங்களுக்கு உரையாடல்களும் எழுதி வந்த காரணத்தால் பகலில் பலமணிநேரம் தூங்குவது வழக்கமாகிவிட்டது. அதன் காரணமாக நிகழ்ச்சிகளுக்கு அவர் நேரம் கழித்து வரநேர்ந்தது.

சிறந்த பேச்சாளராகத் திகழ்ந்த அண்ணா வராதது கண்டு பொதுக் கூட்டத்திற்கு வந்திருந்தவர்கள் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். தலைவர் கல்கி பொறுமையோடு உட்கார்ந்திருந்தார். நீண்ட நேரம் கழித்து எப்படியோ அண்ணா வந்து சேர்ந்தார். அது வரை ஏமாற்றத்தோடும், அலுப்போடும் காணப்பெற்ற மக்கள் அண்ணாவைக் கண்டதும் அவைகளையெல்லாம் மறந்தார்கள். புது உற்சாகம் பெற்றுக் கரவொலி எழுப்பினார்கள். மக்களின் மனநிலை அண்ணாவுக்குப் புரிந்தது. இவ்வளவு நேரம்காத்துக்கிடந்தவர்களுக்கு நீண்ட நேரம் பேசினால் தான்முழுத்திருப்தி ஏற்படும் என்று அவருக்குத் தோன்றியது. தமக்குத் தந்திருந்த ஒரே பொருள் பற்றி நெடுநேரம் பேசுவதை விட வேறு பொருள்கள் பற்றியும் அவர் பேச விரும்பினார்.

தம் எண்ணத்தை ஆசிரியர் கல்கியிடம் காதோடு தெரிவித்தார். தலைவரும் முக்கிய பேச்சாளரும் ஏதோ கிசுகிசுப்பதைக் கண்ட மக்கள் என்னவோ ஏதோ என்று தவித்துப் போனார்கள். தமக்கு அவசர வேலை இருப்பதாக அண்ணா சொல்லிவிட்டு சில நிமிடங்கள் மட்டும் பேசிவிட்டுப் போய்விடுவாரோ என்றெல்லாம் எண்ணித்தவித்தனர். ஆனால் அண்ணா அன்று நீண்ட நேரம் பேசினார். எந்தப் பொருள் பற்றி எத்தனை மணிநேரம் வேண்டுமானாலும் சுவையோடு அண்ணாவினால் பேச முடியும் என்பதை அந்தப் பொதுக் கூட்டம் நிரூபித்தது. அடிக்கடி மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் எழுப்பிக் கொண்டே இருந்தார்கள். அன்று அண்ணா பேசிய பேச்சு இன்னும் பலரிடையே நினைவில் இருக்கவே செய்யும்.

அதற்குப் பிறகு ஆசிரியர் கல்கி தலைவர் உரை என்று ஒன்று இருப்பதையே மறந்திருந்தார். அதற்குரிய காரணத்தையும் அவர் குறிப்பிட்டார். தலைவர் உரையை நான் நிகழ்த்த வேண்டும் என்பதையே மறந்து விட்டேன். வியப்புக் கடலில் ஆழ்ந்து போயிருக்கிறேன். அப்படிப்பட்ட ஒரு நிலையை அன்பர் சி.என். அண்ணாதுரை தமது அரிய சொற்பொழிவினால் ஏற்படுத்தி விட்டார். ஆசிரியர் கல்கி அந்தப்பொதுக்கூட்டத்தில் தான் அண்ணாவை அறிஞராகக் கண்டார். 'இவர் சாதாரண அண்ணாதுரையல்ல' அறிஞர் அண்ணாதுரையாகவே எனக்குத் தோன்றுகிறார் அப்படி அழைப்பதே மிக மிகப் பொருத்தம் என்றார் ஆசிரியர் கல்கி. அது கேட்டு மக்கள் பெரிய அளவில் ஆமோதித்துக் கைதட்டினார்கள். அன்றுமுதல் தான் அண்ணா அறிஞர் அண்ணா ஆனார்.

- நவீனன்

# வடமராட்சிக் கடற்பரப்பில் அடாத்தான செயல்கள் அதிகரிப்பு

## கண்காணிப்பு குழுவிடம்முறையிட தீர்மானம்

(மந்திகை)

வடமராட்சிக் கடற்பரப்பில், வெளிமாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்கள் அத்துமீறி மீன்பிடித்து வருவதாக பாதிக்கப்பட்டோரால் வடமராட்சி வடக்கு கடல் தொழிலாளர் சங்கத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இரவு வேளையில், இவ்வாறு றோலர்களில் அத்துமீறி நுழைவதோடல்லாமல், பிடிக்கப்பட்ட மீன்களை காலையில் பருத்தித்துறை மீன்சந்தையில் சந்தைப்படுத்தி வருவதாகவும்,

திருகோணமலை, வன்னி ஆகிய இடங்களில் இருந்து வரும் மீனவர்களே இவ்வாறு அடாத்தான செயல்களில் ஈடுபடுவதாகவும் அம் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவிடயம்குறித்து போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறையிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக வடமராட்சி கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசச் செயலாளர் க. சூரியகுமார் தெரிவித்தார். (உ-23)

# பிளவுண்ட உளவு அமைப்புக்களை ஒருமித்து செயற்படுத்தத் திட்டம்

(கொழும்பு)

இலங்கையில் இயங்கிவரும் பல்வேறு உளவு அமைப்புக்களையும் ஒரே மத்திய அமைப்பின் கீழ் வைத்திருக்க அரசு முடிவு செய்துள்ளது.

தற்போது இலங்கைப் பொலிஸில் இரு உளவுஅமைப்புக்கள் உள்ளன. அத்துடன் தரைப்படை, விமானப் படை கடற்படைஆகியனவும் தனித் தனியே உளவு அமைப்புகளைக் கொண்டுள்ளன.

இருப்பினும் இவையெல்லாம் அரசியல் வாதிகளைக் கண்காணிக்கவே பெருமளவில் பயன்படுத்தப் பட்டு வருகின்றனஎன்றும் தேசிய பாதுகாப்புக் குறித்து கவனிக்க அவைகளுக்கு நேரம் இருப்பதில்லை என்றும் புகார் தெரிவிக்கப்பட்டு வந்ததையடுத்தே இவற்றை ஒருமுகப்படுத்தி இயங்கச்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக தெரியவருகிறது. (உ)

# இலங்கை-இந்திய கடற்படை நடவடிக்கைகள் மிகத் தீவிரம்

## உறுதிப்படுத்துகிறார் அமைச்சர் மிலிந்த

(கொழும்பு)

இரு நாடுகளுக்குமிடையே கடற்பரப்பில் அதிகரித்து வரும் சட்டவிரோத நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்கென இலங்கையும் இந்தியாவும் தத்தமது கடற்படை நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளதாக பொருளாதார மறு சீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறக்கொட தெரிவித்திருக்கிறார்.

கரையோரப் பாதுகாப்பை பலப்படுத்தும் நோக்கில் இவ்வாண்டின் வரவு செலவுத் திட்டத்தில் அதிகளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது எனவும்,

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் கடற்பகுதி எல்லைகளில் ரோந்து நடவடிக்கை நடத்துவதற்கும், ஆயுதங்கள் கடத்தப்படுவதை தடுப்பதற்கும் அரசாங்கத்திற்கு அதிகாரம் உண்டு எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (உ)

## சுற்றுலாப் பயணிகள் படையெடுப்பு

(இணுவில்)

கந்தரோடைப் பகுதியில் உள்ள ''கயற் கண்ணி'' புதைபொருள் ஆராய்ச்சிப் பகுதிமற்றும், ''சிவயோகம் அன்னையர் குடியிருப்பு'' ஆகியவற்றை தென்பகுதியில் இருந்து வரும் பெருமளவு சிங்கள-முஸ்லிம்சுற்றுலாப்பயணிகள் ஆர்வமுடன் சென்று பார்த்துவருகின்றனர். (உ-49)

## பொஹவந்தலாவையில் புதுவித வைரஸ் காய்ச்சல்

(கொழும்பு)

பொஹவந்தலாவைப் பிரதேசத்தில் ஒருவகை வைரஸ் காய்ச்சல் பரவிவருவதால்அப் பகுதி தோட்டப்பகுதியில் 300க்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளதாக பொதுநலஅமைப்பு தெரிவித்துள்ளது.

இப்பகுதியில் கடந்த சில நாட்களுக்குள் நூற்றுக்கும் அதிகமானோர் இவ் வைரஸ் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (உ.9)

# கோபுர கலசத்தில் இருந்த புதையல் திருட்டு

(கொழும்பு)

வரலாற்றுப் புகழ்மிக்க ஹங்குரன்கெத்த பொத்குல் பௌத்த விகாரையின் கோபுரக் கலசம் உடைக்கப்பட்டு அதில் இருந்த பெறுமதிமிக்க புதையல்களை இனந்தெரியாத குழுவொன்று திருடிச் சென்றுள்ளது.

இம்மாதம் முதலாம் திகதி இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

விகாரையின் கூரை வழியாகச் சென்றே இதனைத் திருடியிருக்கலாம் என நம்பப்படுகிறது. (உ)

# வன்னியால் வந்த குழந்தைகளின் போஷாக்கு நிலைமிகவும் வீழ்ச்சி

(கொழும்பு)

வன்னியில்இருந்து மீளக் குடியேறுவதற்காக திருகோணமலைக்கு திரும்பிய குடும்பங்களில்உள்ள குழந்தைகளில் 68 வீதமானவை குறைந்தநிறையும் போஷாக்கற்ற நிலையிலும் காணப்படுவதாக இலங்கை செஞ்சிலுவைச்சங்கத்தின் திருகோணமலை கிளைத்தலைவர் எ. ஜீ. ஞானகுணாளன் தெரிவித்துள்ளார்.

இக் குழந்தைகளின் போஷாக்கை நிறைப்படுத்துவதற்காக அரசசார்பற்ற நிறுவனங்கள் முன்வரவேண்டும் என்றும் திருகோணமலை மாவட்ட அரசசார்பற்ற இணையர் கூட்டத்தில் அவர் தெரிவித்துள்ளார். (உ-5)

## தென்னைச் செய்கையில் நாட்டம்

(கோப்பாய்)

கோப்பாய்ப்பகுதியில் தென்னைச் செய்கையில் கூடுதலானோர் ஆர்வம் காட்டிவருவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது

இந்த வகையில் கோப்பாய் கிழக்குப்பகுதியிலுள்ளபயிர்ச் செய்கை நிலங்கள் தென்னைப் பயிர்ச் செய்கைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன. (உ-79)

## மீன்களின் விலை வீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் மீன்களின் விலை கடந்த இரு தினங்களாக மிகவும் வீழ்ச்சி கண்டுள்ளது.

அண்மையில் வீசிய கடும் காற்றினால் ஏற்பட்ட காலநிலை மாற்றத்தையடுத்து பெருமளவு மீன்கள் வலையில் படுவதாக கூறப்படுகிறது. (உ)

## திருவிழா

(அரியாலை)

திருநெல்வேலி நீலாயதாக்ஷி சமேத காயாரோஹணேஸ்வரர் ஆலய தேர்த்திருவிழா எதிர்வரும் 11ஆம் திகதி சனிக்கிழமையும், மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம் பெறவுள்ளது. (உ-225)

# சமுர்த்தித் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு உரமானிய முத்திரை

(கொழும்பு)

சமுர்த்தித் திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கு ஆயிரம் ரூபா பெறுமதியான உரமானிய முத்திரைவழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு உருகிறது.

சமுர்த்தி அமைச்சர் சிறிசேன ரூபசிங்க இத்தகவலை தெரிவித்துள்ளார்.

யூரியா உரத்திற்கு மாத்திரம் முன்னர் மானியம் வழங்கப்பட்டது.

சமுர்த்தி உர முத்திரை வழங்கப்படும் போது, விவசாயிகள் தங்களுக்குத் தேவையான எந்த உர வகையையும் கொள்வனவு செய்து, விவசாய உற்பத்தியைக் கூட்டி கூடிய இலாபம் பெற வழியேற்படும் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (உ)

## சிறுவன் படுகாயம்

(அல்லைப்பிட்டி)

கிளிநொச்சி, பரந்தன் பகுதியில் கடந்த சனிக்கிழமை மாடுமேய்த்துக்கொண்டிருந்த சிறுவனொருவன் மிதிவெடியில் சிக்கிபடுகாயமடைந்துள்ளான்.

கோணாவில் காந்தரூபன் குடியிருப்பை சேர்ந்த தம்பித்துரை ராஜன் (வயது-15) என்ற சிறுவனே இரண்டு கண்களும் பாதிக்கப்பட்ட நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளான். (க-76)

## சிந்தனைக்கு விருந்து

### உலகில் இந்நாட்டுக்கு இணை இல்லை

சர்வசன வாக்குரிமை முதற்சேர் நாடு
சண்டையின்றி ஆளுரிமை பெற்ற நாடு
சர்வஉல கத்தினரும் வியக்கப் பெண்ணைத்
தலைவியாய் முதன்முதலில் தெரிந்த நாடு
பர்வதமாம் சிவனொளி பாதம் என்ற
பலமதமும் பொதுத்தொழுகைக் கிடமாம் நாடு
தர்மமுணர்ந் தனைவரையும் சமமாய்க் கொண்டால்
தாரணியில் இந்நாட்டிற் கிணையெந் நாடே?

- பழையவன்

# மியான்மார் எதிர்க்கட்சித் தலைவி வீட்டுக்காவலில் இருந்து விடுவிப்பு

(ரங்கூன்)

மியான்மாரின் எதிர்கட்சித் தலைவியும், 1991ல் நோபல் சமாதான பரிசை வென்றவருமான ஆங்சாங்சூக்சி 19 மாத வீட்டுக்காவலின் பின் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முதல் அவர் எந்த வித இடையூறுமின்றி அவரது கட்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்று மியான்மார் இராணுவ அரசின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

56 வயதான சூக்சியின், ஜனநாயகத்துக்கான தேசிய லீக், 1990இல் நடைபெற்ற தேர்தலில் அமோக வெற்றியீட்டிய போதும் ஆட்சியமைக்க அனுமதிக்கப்படவில்லை.

இதே வேளை, 1962 இல் இடம்பெற்ற சதிப்புரட்சியின் பின் மியான்மாரில் இராணுவ ஆட்சியே இடம்பெற்று வருகிறது. கடந்த 2000 செப்ரெம்பர் முதல் வீட்டுக்காவலில் இருந்து வரும் இவர் 1989 முதல் 1995 வரையும் வீட்டுக்காவலில் இருந்து வந்ததும் குறிப்பிடத்தக்கது. (உ-9)

# 4500 ஆண்டுகள் பழமைவாய்ந்த பிரமிட் எகிப்தில் கண்டுபிடிப்பு

(கெய்ரோ)

4 ஆயிரத்து500 ஆண்டுகள் பழமையான பிரமிட் எகிப்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

எகிப்தின் தலைநகரான கெய்ரோவுக்கு வெளிப்புறத்தில் காணப்படும் இப்பிரமிட் பெயர் குறிப்பிட முடியாத அரசி ஒருவரின் கல்லறையாக இருக்கலாம் என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளைஎகிப்தில்கண்டு பிடிக்கப்பட்ட 10 வது பிரதான பிரமிட் இது வென்பதும் 4 ஆண்டுகளின் பின் கண்டு பிடிக்கப்பட்ட முதலாவது பிரமிட் இது என்பதும் குறிப்பிடத்தக்கது.

சுவிற்சர்லாந்தைச் சேர்ந்த புதைபொருள் ஆய்வாளர்களே இதனை கண்டு பிடித்துள்ளனர் என்றும் இது ஒரு நற்செயலான கண்டுபிடிப்புஎன்றும் எகிப்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (உ-7)

## நாய்கள் நஞ்சூட்டி அழிப்பு

(யாழ்ப்பாணம்)

நாளை திருநெல்வேலி தெற்கு, அம்மன் வீதி, பிள்ளையார் வீதி, சட்டநாதர் வீதி, இராமலிங்கம் வீதி, ஆடியபாதம் வீதி ஆகிய பகுதிகளில் கட்டாக்காலி நாய்கள் நஞ்சூட்டி அழிக்கப்படவுள்ளதாக நல்லூர் பிரதேச சபை அறிவித்துள்ளது. (உ)

## நாசச் செயல்புரிந்தோர் நீதிமன்றில் சரண்

(ஹேக்)

கொசோவோவில் முன்னாள் அதிபர் ஸ்லோபொடான் மிலோசெவிக்கின் வலது கரமாக கருதப்பட்ட யூகோஸ்லாவிய உதவிப் பிரதமர் நிக்கோலாசை றேரவிக்கும்,

1992 இல் ஒமர்ஸ்கா சிறைமுகாமில் செர்பியர் அல்லாதோர் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட கொலைகள், பாலியல் வல்லுறவுகள் மற்றும் கேவலப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு தலைமை வகித்த மொம்சியோ குருபசனும் அண்மையில் சுயேச்சையாக ஹேக் விசாரணை நீதிமன்றத்தில் சரணடைந்துள்ளனர்.

இவர்கள் யுத்தக் குற்றவாளிகளுக்கான குற்றச்சாட்டுகளை எதிர்நோக்குபவரென்று விசாரணை நீதிமன்றப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (உ)

# உலக தரிசனம்

# பிரான்ஸின் புதிய தலைவராக மீண்டும் ஜக்ஷராக் தெரிவானார்

(பிரான்ஸ்)

பிரான்ஸின் புதிய தலைவராக மீண்டும் ஜக்ஷராக் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஞாயிறன்று இடம்பெற்ற இரண்டாம் கட்டமும் இறுதிக்கட்டமுமான வாக்கெடுப்பில் பிரான்ஸின் முன்னாள் ஜனாதிபதி ஜக்ஷராக் அமோக வெற்றியீட்டியுள்ளார்.

இறுதிக்கட்ட வாக்கெடுப்பில் வெற்றியீட்டிய ஷராக்கிற்கு 81 சதவீத வாக்குகளும் அவரை எதிர்த்து போட்டியிட்ட தேசிய முன்னணி தலைவர் லூக்களுக்கு 17.9 வீத வாக்குகளும் கிடைத்துள்ளன.

ஜக்ஷராக்கின் வெற்றியைக் கொண்டாடும் வகையில், பல்லாயிரக்கணக்கான ஆதரவாளர்கள் நகரெங்கும் கூடி ஆரவாரத்தில் ஈடுபட்டுவருகின்றனர். (உ-7)

## இந்திய நாடாளுமன்றின் அகவை ஐம்பது

(புதுடில்லி)

உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடாக விளங்கும் இந்தியாவின், நாடாளுமன்றம் அமைக்கப்பட்டு எதிர்வரும் 13 ஆந் திகதியுடன் 50 ஆண்டுகள் நிறைவடைகிறது.

1952ஆம் ஆண்டு மே 13 ஆம் திகதி முதன் முதலில் இந்திய நாடாளுமன்றம் கூடியது.

50 ஆண்டுகள் நிறைவையொட்டி பொன்விழாக் கொண்டாட்ட ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. நினைவு முத்திரை ஒன்றும் வெளியிட மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

இந்திய நாடாளுமன்றத்தின் 50 ஆண்டுகால பெருமை மிகு வரலாறு என்ற தலைப்பில் கண்காட்சி ஒன்றும் நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-9)

## அன்ரூ அடெம்மின் இடுப்பு எலும்பு முறிவு

(வெலிங்டன்)

நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் சகலதுறை ஆட்டக்காரரான அன்ரூ அடெம் பாகிஸ்தானிய சுற்றுப்பயணத்தின் போது காயமுற்ற நிலையில் நியூசிலாந்து திரும்பியுள்ளார்.

இடுப்புப்பகுதியில் ஏற்பட்ட எலும்பு முறிவுகாரணமாகவே இவர் இடை நடுவில் நாடு திரும்பியுள்ளார்.

இதே வேளை, இவ்வருட முற்பகுதியில் இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் அறிமுகம் பெற்று தனது முதலாவது போட்டியிலேயே 6 விக்கெட்டுக்களை இவர் கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது. (உ-9)

# இந்தியஅமெரிக்கபடைகள் இணைந்து ஆக்ராவில் கூட்டு இராணுவஒத்திகை

(புதுடில்லி)

அமெரிக்காவுடனான கூட்டு இராணுவ ஒத்திகை ஒன்றை இந்த மாத நடுப் பகுதியில் நடத்தவிருப்பதாக இந்தியா கூறியுள்ளது.

வட இந்தியநகரமான ஆக்ராவில் இந்தகூட்டு இராணுவ ஒத்திகை நடைபெறவுள்ளது.

இந்திய இராணுவத்தின் தராத் துருப்பினருடன் அமெரிக்கஇராணுவ தின்ஆசியப்சுபிக் படைபிரிவின் விசேட துருப்பினரும் இருநாடுகளினதும் விமானங்களும் இந்த இராணுவ ஒத்திகையில் பங்கு கொள்ளவுள்ளன. 1998 இல் இந்தியாவின் அணுஆயுத சோதனையை அடுத்து இரு நாடுகளுக்கும் இடையிலான இராணுவத் தொடர்புகளை அமெரிக்கா இடைநிறுத்தியிருந்தது.

ஆப்கானிஸ்தானில் யுத்தம் செய்யும் அமெரிக்கப் படை வீரர்களுக்கு இரு நாடுகளும் ஆதரவு வழங்கியதை அடுத்து இராணுவத் தொடர்களை அமெரிக்கா மீண்டும் ஆரம்பித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (உ-5)

## பதிவுகள் மேற்கொள்ள அழைப்பு

யாழ். பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ஜே/72- சின்னக் கடை கிராம அலுவலர் பிரிவில், இடம் பெயர்ந்தோர் தொடர்பான பதிவுகள் இன்று மேற்கொள்ளப்படவிருப்பதால்,

மேற்படி கிராம அலுவலர் பிரிவில் இருந்து இடம் பெயர்ந்து வேறு பகுதிகளில் வசிப்பவர்களை இன்று காலை 9.00 மணிக்கு சகல ஆவணங்களுடனும் சம்பந்தப்பட்ட கிராம அலுவலர் அலுவலகத்திற்குச் சமூகம் தருமாறு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் அ. ஸ்ரீஜெகன் அறிவித்துள்ளார். (உ)

## மே. இந்தியதீவு அணியிடம் இந்திய அணி தோல்வி

(புதுடில்லி)

இந்திய - மேற்கிந்தியதீவு அணிகளுக்கிடையில் பாபுதோஷில் இடம்பெற்ற 3 ஆவது டெஸ்ட் போட்டியில் மேற்கிந்தியதீவுஅணி 10விக்கெட்டுகளால் வெற்றி பெற்றுள்ளது.

இந்தியா முதலாவது இனிங்ஸில் 102 ஓட்டங்களையும் மேற்கிந்தியதீவு அணி முதலாவது இனிங்ஸில் 394 ஓட்டங்களைப் பெற்றன.

ஹால்கூப்பர் 115 ஓட்டங்களையும் சந்திரபோல் ஆட்டமிழக்காமல் 101 ஓட்டங்களையும், ஆர்ஷேவன் 60 ஓட்டங்களையும், பிரையன்லாரா 55 ஓட்டங்களையும் பெற்றனர்.

இந்தியா இரண்டாவது இனிங்ஸில் 296ஓட்டங்களைப் பெற்றது. இதில்கங்குலி ஆட்டமிழக்காமல் 60 ஓட்டங்களையும், வொஷின்ஜாப்பிர் 51 ஓட்டங்களையும் பெற்றனர்.

மேற்கிந்தியதீவு அணி அதன் இரண்டாவது இனிங்ஸில் எந்தவித விக்கெட் இழப்புமின்றி 5 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியுள்ளது.

இதே வேளை இரு அணிகளுக்குமிடையில் இது வரை நடைபெற்ற 3 டெஸ்ட் போட்டிகளில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு வெற்றியை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-9)

## தபால் குண்டுகள் மேலும் கண்டுபிடிப்பு

(வாஷிங்டன்)

அமெரிக்காவில் தபால் பெட்டிக் குண்டுகள் மேலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கிராமங்களில்உள்ள தபால் நிலைய பெட்டிகளுக்குள் இக் குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

உள்நாட்டு தீவிரவாத அமைப்பு ஒன்றே இவ் வெடி குண்டுப் பீதியை ஏற்படுத்தி வருவதாக தெரிவித்த அமெரிக்க அதிகாரிகள் அக்குழுவை விரைவில் பிடித்துவிடுவோம் என்று தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கடந்த வெள்ளிக்கிழமை அன்று அமெரிக்க மாநிலம் ஒன்றில்இடம்பெற்ற தபால் குண்டுவெடிப்பில் 3 பேர் படுகாயமடைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது (உ-7)

## சைவநெறித் தேர்வு முடிவுகள் வெளியாகும்

சைவ பரிபாலன சபையினரால் கடந்த வருடம் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட சைவநெறித் தேர்வு முடிவுகள் இன்னும் ஒரு சில தினங்களில் சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக பரீட்சைச் செயலாளர் வ. கந்தசாமி தெரிவித்தார்.

தேர்வில் முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களுக்கானபரிசளிப்பு வைபவம் இம்மாதம் 27 ஆம் திகதி நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (உ-6,2)

## நேபாள அரசு மாவோ தீவிரவாதிகளுடன் விரைவில் சமாதானப்பேச்சு

(காத்மண்டு)

நேபாளஅரசுக்கும்,மாவோ தீவிரவாதிகளுக்கும இடையில் மிகவிரைவில் அமைதிப் பேச்சுக்கள் இடம் பெறவுள்ளன

கடந்த 6 வருட காலமாக இடம்பெற்று வரும் மாவோ தீவிரவாதிகளின் மன்னர் ஆட்சிக்கு எதிரானவன்முறைகள் மற்றும் கெரில்லாத் தாக்குதல்களுக்கு முடிவுகட்ட இருதரப்பும் இணங்கியுள்ளதாகத் தெரியவருகிறது. தீவிரவாதிகள் சரணடையும் வரையில் பேச்சுவார்த்தைகள் இடம் பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை எனபிரதமர் ஷேர் பஹதூர் டியூபா தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது (உ-7)

## அகமதாபாத்தில் மீண்டும் மதக்கலவரம் வெடித்தது

(புதுடில்லி)

குஜராத்தின் அகமதாபாத் நகரில் மீண்டும் மதக்கலவரம் வெடித்துள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் இரவு நடந்த கலவரத்தின் போது 7பேர் பலியானதுடன் 37 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

அங்கு இடம்பெறும் கலவரங்களில் நூற்றுக் கணக்கான பொதுமக்கள்பலியாகியிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-8)

மாநகராட்சி நூலகம்
யாழ்ப்பாணம்.

தலையின் இழிந்த மயிரனை
யர் மாந்தர்
நிலையின்இழிந்த கடை.
-குறள்

வலம்புரி

## அரச நியமனங்கள்

இலங்கை போன்ற நாடுகளில் வேலையின்மைப் பிரச்சினை முக்கிய இடத்தைப் பெறுகின்றது.

யுத்தத்திற்கு வாரி இறைத்ததன் மூலம் முதலீட்டுப் பணிகளும் அபிவிருத்திப் பணிகளும் ஸ்தம்பிதமடைந்தன. இதன்காரணமாகவேலை வாய்ப்பு வழங்கும் தகுதியை அரசு இழந்துள்ளது.

பொதுவாக இலங்கையில் அரச துறையில் பணிபுரிவதையே மக்கள் விரும்புகின்றனர். இதற்குப் பல காரணங்கள் உண்டு. அதில் ஓய்வூதியம், நிரந்தரத் தன்மை, பாதுகாப்பு போன்றவை முக்கிய இடத்தைப் பெறுகின்றது. தனியார் துறை வேலைவாய்ப்பென்பது மிகவும் அருந்தலாக இருப்பதுடன் நிரந்தர நியமனங்களோ ஊழியர் சேமலாபங்களோ விடுமுறைச்சலுகைகளோ அறவே இல்லையென்று கூறிவிடலாம்.

குறிப்பாக வடக்கு கிழக்கில் வேலை வாய்ப்பை வழங்கக் கூடிய தனியார் அமைப்புகள் இல்லை. இதனால் படித்த இளைஞர், யுவதிகள் அரச பதவிகளைப் பார்த்துக் காத்திருக்கின்றனர். இதனால் மனித வலு வீணடிக்கப்படுவதைத் தவிர வேறுபயன் எதுவுமில்லை.

இத்தகைய விரும்பத்தகாத நிலையைத்தவிர்ப்பதற்கு படித்த இளைஞர் யுவதிகளுக்கு தொழில் சார்பயிற்சிகளை வழங்குவதற்கு அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் நடவடிக்கைஎடுப்பது அவசியமாகும்.

தொழில் சார்பயிற்சிகளை வழங்கி கூட்டுமுயற்சிகள்- பங்குடமைகள்- கம்பனிகள் போன்றவற்றை அமைப்பதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தி கொடுப்பதன் மூலம் பலர் வேலைவாய்ப்பைப் பெறும் வழியுண்டாகும். இதுவிடயத்தில் யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

தென்னிலங்கையைப் பொறுத்த வரை அங்கு உலக நாட்டு வங்கிகள் பல் தேசியக்கம்பனிகள் சுதந்திர வர்த்தக வலயங்கள் மூலம் வேலை வாய்ப்பைப் பெறக் கூடிய நிலையிருக்கும்போது வடபுலத்துத் தமிழ் இளைஞர்களின் வேலை வாய்ப்பு விடயத்திலும் கவனமெடுப்பது அவசியமாகும்

---

# என்புருக்கி நோய் எளிதில் பரவாதிருப்பதற்கு

# ஜப்பானின் நடவடிக்கைகள் முன்மாதிரியானவை

எஸ். இலக்குமிகாந்தன்
எம். எஸ். சி.

## மருத்துவ விளக்கம்

1882ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24 ஆம் நாளை விஞ்ஞானவரலாற்றில் ஒருபொன்னான நாள் எனலாம். ஜேர்மனி நாட்டு இராபர்ட் கோச் என்ற விஞ்ஞானி 271 ஆம் முறை முயற்சி செய்து என்புருக்கியை (க்ஷயம்) உண்டாக்கும் கிருமியைக் கண்டறிந்தார். ஒரு சென்ரி மீட்டரை 40,000 பாகமாகப் பகுத்தால் உண்டாகும் நீளம் கொண்ட ஒரு தண்டு தான் இக்கிருமியின் வடிவு. என்புருக்கி ஒரு பரம்பரை நோய் அன்று என்பதும் அது விரைவில் பரவும் தன்மை பெற்றது என்பதும் கண்டறியப்பட்டன. ஆண்டுதோறும் 50 இலட்சம் பேர் இந்நோயால் மடிந்தனர். இம்மடிகின்ற தொகையில் பெரும் பாகம் குழந்தைகளே. ஏழு நொடிக்கொருவர் இவ்வுலகில் என்புருக்கியால் இறந்தனர். எவ்வயதினருக்கும் இவ்வியாதி வரக்கூடும் என்றாலும், 15 வயதிலிருந்து 45 வயது வரை உள்ளோர் இந்நோய்க்குச் சிறப்பாக ஆளாகின்றனர். வாழ்க்கை மலரும் இப்பருவத்திலுள்ளோரை இந்நோய் ஏன் வருத்துகின்றதுஎன்பதை அறிய இயலவில்லை. மனித குலத்தின் இம் மாபெரும் பகைவனை விஞ்ஞானம் என்னும் அரிய கருவி கொண்டு மனிதர் எங்ஙனம் வென்றனர் என்பதை ஆராய்வாம்

### என்புருக்கி எவ்விதம் பரவுகின்றது?

என்புருக்கிநோய் கொண்டோர் உமிழும் பொழுதோ அல்லது இருமும் பொழுதோ இக்கிருமிகள் பரவுகின்றன. உடல் நலமிருக்கும் ஒருவரின் மூக்கின்வழியாகவோ அல்லது வாயின் வழியாகவோ இக்கிருமிகள் அவரது உடலுள் நுழைகின்றன. தரையில் உமிழ்ந்த எச்சிலில் உள்ள கிருமிகள் புழுதியாக மாறி மூச்சை உள்ளிழுக்கும் பொழுது உடலுள் நுழைகின்றன. என்புருக்கி உள்ள மனிதன் உபயோகித்த கோப்பை, கரண்டி இவற்றில் இக்கிருமிகள் ஒட்டிக்கொண்டு அதை மற்றவர்கள் உபயோகிக்கும் பொழுது அவர்கள் உடலில் ஒட்டிக் கொள்கின்றன. என்புருக்கி கொண்ட மனிதனின் உதட்டில் பட்ட எப்பொருள் மீதும் இக்கிருமிகள் நிறைந்துள்ளன. பால் வழியாகவும் இக்கிருமிகள் எளிதில் பரவுகின்றன. பசுக்கள் இந்நோயால் பாதிக்கப்பட்டிருக்கக்கூடும். அவற்றின் பாலை உட்கொண்டால் என்புருக்கிக் கிருமிகள் உடலில் நுழைகின்றன. பாலை மிதமாகக் காய்ச்சிக் குளிரச் செய்து, உட்கொள்வதின் மூலம் இக்கிருமிகளைத் தடுக்கலாம். இக்கிருமிகள் உடலுள் நுழையுங்கால் நுரையீரலில் ஊன்றி விடுகின்றன.

இக்கிருமிகள் எளிதில் அதிகமாகப் பரவுகின்றன. உடல் இவற்றை எதிர்த்துப் போராடுகின்றது. இக் கிருமிகளை அழிக்காமல் அவற்றைச் சுற்றி ஒரு வித வேலி எழுப்புகின்றது. புண்ணின் தழும்பைப் போல் இவ் வேலிகள் காட்சியளிக்கின்றன. ஒவ்வொரு தழும்பும் இக்கிருமிகளைச் சுற்றியுள்ள ஒரு சிறைஆகும். பல மனிதர்களின் உடலினுள்ளும் அவர்களை அறியாமலேயே இக்கிருமிகளை உள்ளிட்ட பல சிறைகள்உள்ளன. இக்கிருமிகள் அளவுக்கு மேல் பெருகுமாயின் அவற்றை அடக்கியுள்ள வேலிகள் தகர்க்கப்படுகின்றன. நுரையீரலின் நுண்ணிய காற்றறைகளை இக்கிருமிகள் அழிக்கின்றன. அதிக உழைப்பால் களைத்தவர்கள், மனக்கவலையால் வாடுபவர்கள், சத்து இல்லாத உணவை உண்ணுவோர்கள் ஆகியோரை இந்நோய் எளிதில் பற்றுகிறது. இந்நோயால் நுரையீரல் துளைக்கப்படுகின்றது மனிதன் இறக்கநேருகின்றது.

### என்புருக்கியைக் கண்டறிவது எப்படி?

என்புருக்கிக்கு ஆறு முக்கிய அறிகுறிகள் உள்ளன.

1. காரணமின்றிக் களைப்படைதல் அல்லது அடிக்கடி களைப்படைதல்.

2. காரணமின்றி உடல் நிறை குறைதல்.

3. பல நாட்களாகக் குணமடையாத இருமல்.

4. பசியின்மையும், ஜீரணமின்மையும்.

5) கோழையுடன் இரத்தம் சேர்ந்து வருதல் அல்லது வாயினின்றும் இரத்தம் வடிதல்,

அள்ளைப்பக்கத்தில் பெருவலி தோன்றல்,

சோதனைச் சாலையில் ஒரு வகைத் திரவம் தயாரித்துள்ளார்கள், இத்திரவத்தைத் தோலின் மீது தடவுவார்கள். இரண்டு நாட்களுக்குப் பிறகு என்புருக்கி உள்ளோர் உடலில் இத்திரவம் தடவியஇடத்தில் ஒரு தடிப்புக் காணப்படும், உடலில் நோய்க்கிருமிகள் இல்லாவிடில் இத்தடிப்புக் காணப்படுவதில்லை. இருதயத்தை எக்ஸ் X கதிர்கள் கொண்டு படமெடுத்தால் உடலில் என்புருக்கி நோய் உள்ளதா இல்லையா என்பதைஉடனேஅறிந்துகொள்ளலாம். என்புருக்கி பரவுவதைத் தடுக்க பி. சி. ஜி (B. C. G.) ஊசி குத்தப்படுகிறது.

### என்புருக்கியைக் குணப்படுத்துவது எப்படி?

என்புருக்கி கண்டோர்கள் நுரையீரலில் கிருமிகளைச் சுற்றியுள்ள தழும்புகள் காணப்படுகின்றன. என்புருக்கி நோயுள்ளோர்கள் இத்தழும்புச் சிறைகளின் வேலிகள் உடையா வண்ணம் மெதுவாக நடக்கவேண்டும். அதிக உழைப்புக்குத் தங்களை ஆளாக்கிக் கொள்ளக் கூடாது. நோயினின்றும் குணமடைந்தவர்கள் தகுந்த பாதுகாப்பு எடுத்துக் கொள்ள வேண்டும். இல்லையேல் மீண்டும் இந்நோய் பரவ ஆரம்பிக்கும். மணமாகாத நோயாளிகள் முற்றிலும் குணமடையும்வரை திருமணத்தைப் பற்றி எண்ணக் கூடாது. மனக்கவலைக்கு இடம் கொடுக்கக் கூடாது. சத்துள்ள உணவுப் பொருள், சுத்தமான காற்று, மருத்துவர் கூறும் மருந்து இவற்றைப் பதற்றமின்றி உட்கொள்ள வேண்டும்.

### ஜப்பான் காட்டிய வழி

1951 ஆம் ஆண்டு ஜப்பானில் என்புருக்கி நோயைக் கட்டுப் படுத்துவதற்காக ஒரு சட்டம் இயற்றப்பட்டது.

இச்சட்டத்தின்படி ஆறு வயதிற்கு மேற்பட்ட ஒவ்வொரு ஜப்பானியக் குடிமகனும் அரசாங்கத்தால் அளிக்கப்படும் இலவச மருத்துவச் சோதனைக்கு ஆண்டிற்கொரு முறை ஆளாக வேண்டும், பள்ளி, அலுவலகம், தொழிற்சாலை இவற்றின் தலைவர்கள் தங்களுக்குக் கீழ் உள்ளவர்களை இச்சோதனைக்கு அனுப்பவேண்டும். சோதனையின் பொழுது என்புருக்கியால் பீடிக்கப்பட்டவர்கள் என்று எடுத்துக் காட்டப்பட்டவர்கள் மீண்டும் மருத்துவச் சோதனைக்கு அனுப்பப்பட்டுத் தகுந்த சிகிச்சை அளிக்கப்படுவர். ஓர் ஊரில் என்புருக்கி பரவுகின்றது என்ற சந்தேகம் எழுந்தால் அவ்வூரின் தலைவர் கீழ்க் குறிப்பிடப்பட்டவர்களை இலவச மருத்துவ சோதனைக்கு அனுப்புவர்:-

1) என்புருக்கி பரவ வாய்ப்பளிக்கும் தொழிலில் உள்ளவர்கள்- உதாரணமாகப் புழுதியை உட்கொள்ளும் வகையில் பாதைத் தொழிலில் ஈடுபடுபவர்கள்.

2) என்புருக்கி பரவிய இடத்திலுள்ள பாடசாலைகளிற் பயிலும் மாணவர்கள்.

3) என்புருக்கி வியாதி உள்ளவர்களுக்குப் பணி புரிந்து அவர்கள் இல்லத்தில் உறைபவர்கள். மேற்கண்டவர்களுக்கு X கதிர்கள் கொண்டு புகைப்படங்கள் எடுக்கப்படுகின்றன. கோழை பரிசோதிக்கப்படுகின்றது. இரத்தப் பரிசோதனை செய்யப்படுகின்றது.

1942 ஆம் ஆண்டிலிருந்து ஜப்பானில் எல்லோருக்கும் என்புருக்கித் தடுப்பூசி குத்தப்படுகிறது. என்புருக்கி எதிர்ப்புச் சங்கம் 1939 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. என்புருக்கி ஆரம்பமாகும் தருணத்திலேயே X கதிர் சோதனையால் அதைக் கண்டறிதல், பீடிக்கப்பட்டோரைத் தனியாக வைத்துக் குணப்படுத்தல், பீ.சி ஜி (B C G.) ஊசி கொண்டு இந் நோயைத்தடுத்தல் ஆகிய இவற்றை இச் சங்கம் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இச் சங்கத்தின் ஆண்டுக் கூட்டத்தில், உடல் நல அமைச்சர்கள், நாட்டிலுள்ள சிறந்த மருத்துவர்கள், மாதர் சங்க உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். என்புருக்கி தடுப்பு முறையில் மிகச் சிறந்த நகராண்மைக் கழகத்திற்குப் பரிசு வழங்கப்படுகிறது. என்புருக்கி தடுப்பு வாரம் ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்படுகிறது, அவ்வாரத்தில் என்புருக்கித் தடுப்பைப் பற்றித் திரைப்படங்கள் காட்டப்படுகின்றன. பேச்சுகள் நடத்தப்படுகின்றன, கண்காட்சிகள் அமைக்கப்படுகின்றன. இச் சங்கம் மாதம் இரு முறை ஓர் ஏட்டினை வெளியிடுகின்றது. இவ்வேடுகளில் மக்களுக்குப் பயன்படும்பல குறிப்புகள் உள்ளன. செப்ரெம்பர் மாதம் முதல் டிசெம்பர் மாதம் வரை என்புருக்கி நோயாளிகளுக்கு உதவுவதற்காக முத்திரைகள் விற்பனையாகின.

''நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'' என்பதை மக்கள் எல்லோரும் உணர்ந்து விட்டார்கள். உலகம் முழுவதும் இந் நோயை எதிர்த்துப் போராடத் தொடங்கி விட்டது. இப் போராட்டத்தை முதலில் தொடங்கியது உலகத்தின் மிகச் சிறிய நாடாகிய டென்மார்க்ஆகும். பிறகு இப் போராட்டம் நோர்வே, சுவீடன், நாடுகளுக்குப் பரவியது. ஐ. நா. சங்கத்தின் கிளைகளான உலக உடல் நல சங்கம் (W.H.O.) உலகக் குழந்தைகள் நல சங்கம் (Unicef) ஆகிய சங்கங்களும் என்புருக்கியை ஒழிப்பதில் ஈடுபட்டிருக்கின்றன. இந்தியாவில் ஆந்திர மாகாணத்திலுள்ள மதனபள்ளியில் என்புருக்கி நோய் குறித்து தீவிர ஆராய்ச்சிகள் நடந்தன. உலகத்தில் நடைபெற்ற மாபெரும் போராட்டங்களில்ஒன்று என்புருக்கி ஒழிப்புப்போராட்டம் ஆகும். இப் போராட்டத்தில் பௌதிகம் உலகுக்களித்த பெருங் கருவியாம் X கதிர்கள் பெரும் பங்கு கொள்கின்றன.

---

## தினசரி தியானம்

### பலி

துள்ளும் அறியா மனது பலிகொடுத்தேன்.

- தாயுமானவர்

மன்னே, நான் சொந்தம் பாராட்டும் என்னையே உனக்குப் பலிதானமாக வழங்கி விடுவேனாக.

அவரவர் பாகத்துக்கு ஏற்றாற் போன்று மக்கள் கடவுளுக்கு ஏதாவது படைக்கிறார்கள். மற்ற ஜீவ ஜந்துகளைப் பலியாகக் கொடுப்பது கீழ்த்தரமான கொடை. நல்லுணவைக் கடவுளுக்கு நைவேத்தியம் பண்ணி மற்றவர்களுக்குப் பிரசாதமாய் வழங்குவது மேலானது. கடவுள் மூலம் உயிர்களெல்லாம் இணைக்கப்பட்டிருக்கின்றன என்பதை அது அறிவுறுத்துகிறது. தன்னையே தெய்வக் காரியத்துக்கு மனமுவந்து ஒப்படைத்து விடுவது ஒப்பற்ற செயலாகும்.

ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்



யூனியன் அஷ்யூரன்ஸ் லிமிடெட் கிளை நேற்று யாழ் நகரில் திறந்து வைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள்.






மில்க்வைற்

மில்க்வைற் சோப் இண்டஸ்ரியல்ஸ்
527, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
T.P; 3541


### ஜனாதிபதி...

பொதுச்சபை சிறப்புக் கூட்டத்தில் ஜனாதிபதி ஆரம்ப உரையை நிகழ்த்தவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (த-5).

திருமலைக் கடற்பரப்பில்

## மீன் பிடிக்கச் சென்றவர்கள் மீது கடற்படையினர் அடாவடித்தனம்

(திருகோணமலை)

திருகோணமலை, புத்தளம் குறிச்சிப் பகுதியில் இருந்து நேற்று முல்லைத்தீவுக் கடற்பிரதேசத்தில் யந்திரப் படகில் சென்ற 8 மீனவர்கள் கடற்படையினரால் துப்பாக்கி முனையில் பயமுறுத்தப்பட்டதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த 8 மீனவர்களும் கடலில் மீன்பிடித்து கொண்டிருந்தபோது இவர்களை அணுகிய கடற்படையினர் பீரங்கிப் படகில் இருந்தவாறு ஆகாயத்தை நோக்கி துப்பாக்கியால சுட்டதுடன் மீனவர்கள் அனைவரையும் கடலில் குதிக்குமாறு பணித்தனர்.

இந்நிலையில் மீனவர்கள் படகில் இருந்து குதிக்க மறுத்தனர். இதனை அடுத்து தமது படகை படையினர் தீவிர சோதனை செயதனர் என்றும் மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

திருகோணமலை வாசிகளான நாகநாதன், மணிமாறன், வினோதன், நிறஞ்சன், அருள்ராஜ், ஸ்ரீதரன், நிகிலன், சலோஜன் ஆகியோரே கடற்படையினரின் அச்சுறுத்தலுக்கு உள்ளானவர்களாவர்.

இச்சம்பவம் தொடர்பாக இம் மீனவர்கள் இன்று யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் முறையிடப்போவதாக தெரிவித்துள்ளனர். (ம)

### புலிகளின் தடையை...

எடுக்கப்படும்.

இந்நிலையில் சமாதானப் பேச்சு வார்த்தைக்குத் தொடர்பில்லாத விடயங்கள் பற்றி எதிர்க்கட்சிகள் தேவையில்லாது அலட்டிக் கொள்கின்றன என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

இதேவேளை புலிகள் மீதான தடை நீக்கப்படுமென் ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் சென்ரத் கப்புக் கொட்டுவ கடந்த சில தினங்களுக்கு முன்னர் அறிவித்திருந்தபோதிலும் அமைச்சர் பீரிஸின் அறிவிப்பு அரசிற்கிடையே முரண்பட்ட கருதது நிலவுவதை எடுத்துக்காட்டுவதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (வ)

### பிரதிப் பொலிஸ் மா...

அடுத்தே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்கு விநியோகிக்கப்பட்ட அத்தியாவசிய பொருட்களுக்கு இலஞ்சம் தருமாறு கோரியதாக இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (வ)

### ஜனாதிபதி ஆணைக்...

சிவில் உரிமைகளை ஒழித்துவிடுவது போன்ற கடுமையான தண்டனைகளை வழங்கும் அதிகாரம் ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு இருப்பதனை நீக்கி நீதிமன்றத்தினால் நடைமுறைப்படுத்தவேண்டும் என்று அரசாங்கம் விரும்புகிறது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(வ)

### மேலும் 12 புலி...

வரவேற்று திருகோணமலை கிறீன் வீதியிலுள்ள தமது பணிமனைக்கு அழைத்துச்சென்றார்.

இதேவேளை திருகோணமலை மாவட்ட அரசியலதுறை பொறுப்பாளர் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றையும் நடத்தினார்.

இந்த மாநாட்டில் அரசு- புலிகள் இடையே ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் சமாதான முயற்சிகள் பற்றி கிராமங்கள் தோறும விளக்கமளிக்க நடவடிக்கைகள் எடுத்து வருவதாகவும் அவர் கூறியுள்ளார். (த)

## கோட்டச் செயலகம் திறந்து வைப்பு

(மந்திகை)

தமிழீழ விடுதலைப் புலிகளின் வடமராட்சி அரசியல்துறை கோட்டச் செயலகம் நேற்றுக் காலை 10.00 மணிக்கு நெல்லியடி வதிரிச் சந்திக்கு அண்மையில் சம்பிரதாய பூர்வமாக திறந்துவைக்கப்பட்டது.

கோட்டச் செயலகத் திறப்பு விழா வ.இராசையா தலைமையில் நடைபெற்றது. பணிமனையை கரவெட்டிப் பங்குத்தந்தை அன்ரனிதாஸ் நாடாவை வெட்டித் திறந்துவைத்தார்.

ஈகச்சுடரினை மாவீரர் சோதியாவின் தந்தையார், மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சி.கதிரவேறபிள்ளை, பிரதேசசெயலர் செ.சிறினிவாசன், ஜெனனியின் தாயார் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

கோட்டச் செலகப் பொறுப்பாளர் தயா தமிழீழ தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். அதனைத் தொடர்ந்து அகவணக்கம் செலுத்தப்பட்டதுடன் தேவரையாளி இந்துக் கல்லூரி மாணவர்களால் தமிழ்த் தாய் வாழ்த்து இசைக்கப்பட்டது.

செயலகப் பெயர்ப் பலகையை கரும்புலி கப்டன் மில்லரின் தாயார் திரை நீக்கம் செய்துவைத்தார். யாழ் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, தளபதி பாப்பா ஆகியோர் உரையாற்றினர். (த-23)


யாழ் மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

கடந்த 05.05.2002 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் சங்கத்தின் 2002ம் ஆண்டு நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் தெரிவு செய்யப்பட்டனர்.

மாவட்டத் தலைவர;
திரு-சி-சுந்தரலிங்கம்,
(லிங்கம் பேக்கரி-நாவலர் வீதி. யாழ்ப்பாணம்)

மாவட்ட உபதலைவர்;
திரு-இ-பேரின்பநாயகம்,
(ஸ்ரீசுபா பேக்கரி-சுதுமலை. மானிப்பாய்)

மாவட்ட செயலாளர்;
திரு-கு-காந்தரட்ணம்,
(ஜெயக்குமரன் பேக்கரி-மானிப்பாய்)

மர்வட்ட உபசெயலாளர்;
திரு-அ-செகராஜசிங்கம்,
(பகீரதன் பேக்கரி-கைதடி)

மாவட்ட பரிசோதகர்;
திரு-இ-அமரசேனாதிபதி
(அம்பாள் பேக்கரி-வல்வெட்டித்துறை)

தலைமைச் செயலகம்
559, நாவலர் வீதி,
யாழ்ப்பாண்ம்.

நிர்வாகம்
யாழ்/மர்/பே/உ/சங்கம்






அன்பார்ந்த மாணவர்களே!

மிக விரைவில் வலம்புரியில் எதிர்பாருங்கள் க.பொ.த (சா) தரப் பாடங்களிற்கான மாதிரி வினாத்தாள்கள் விடை களுடன்

(யாழ் நகரின் பிரபல ஆசிரியர்களின் தயாரிப்பு)

ராஜா
(யாழ்ப்பாணம்)
5வது வாரமாக
விஜய், பிரியங்கா சோப்ரா, விவேக் நடித்த
தமிழன்
TAMILAN
தினசரி 10.30, 2.30,. 5.30
[C/3953]

லாலாவின் தயாரிப்பு
சண்சயின் சோப்
மாணவர்களே! போட்டியில் பங்கு கொள்ளுங்கள்.
லாலா அச்சுவேலி



பதவி வெற்றிடம்

★ பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்
★ பத்திரிகை விநியோகத்தர்கள்,

சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் இன்று (07.05.2002) செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு நேரில் வரவும்

வலம்புரி.
15, வெள்ளாந் தெரு,
யாழ்ப்பாணம்.

நிர்வாக
உத்தியோகத்தர்.



கண்ணீர் அஞ்சலி

எமது கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளர்
திருமதி ஜெ. தியாகலிங்கம் அவர்களின்
அன்புத் தாயார்
கனகாம்பிகை அருணாசலம்
அவர்களின் மறைவால்

துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பீடாதிபதி,
உப பீடாதிபதிகள்,
விரிவுரையாளர்கள்,
ஆசிரிய மாணவர்கள்

தேசிய கல்வியியற் கல்லூரி
யாழ்ப்பாணம்.

[C/4184]



ஆதரவைத் தெரிவிக்கின்றோம்

கூட்டுறவுச் சங்கங்களின் நிலுவை எண்பார்வைகளை முடிக்க அர்ப்பணிப்புடன் உழைத்துவரும் உதவிக் கணக்காய்வாளர்களின் நிரந்தர நியமனக் கோரிக்கைக்கு எமது ஆதரவைத் தெரிவித்துக் கொள்கிறோம.

பணிப்பாளரும் பணியாளரும்
கட்டைவேலி-நெல்லியடி
ப. நோ. கூ. சங்கம்.

கரவெட்டி

[C/4185]


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.05.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.